www.padippakam.com

ISSN1901-273X

# இனி
ini 2

Dec 2006


தலையிருந்து கால்வரை
இரும்பினால் அணிந்திருந்த,
மனிதன் ஒருவனைக் கண்டேன்;
அவன்,
தன் முகத்தில் கொடிய பறவையின்
முகக் குறியினைக் கொண்டிருந்தான்;

கொடூரங்களும் அழிவுகளும் நிரம்பிய,
காட்டுமிராண்டித்தனமான யுத்தம்
அவனுக்கு மகிழ்வையூட்டியது.

பாதிக்கப்பட்டோர்,
அவன் காலடியில்
முறையிட்டபோதும்
அதை ஒரு பொருட்டாக
அவன் கொள்ளவில்லை.



32




26



03



Dansk/Tamilsk social-kultur-og littera turblad

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


- ஏ.ஜே.எனும் ஆளுமை மிக்க ஆகிருதி
  மேமன்கவி ................ 03
- ரோஸாபார்க்
  எம்.ஏ.ஜே ................ 04
- Fra jaffna til Jyllinge-2
  Ramanan Balasubramaniyam .... 05
- நிலையாமை நீள்வாழும் காலமிதேன்?
  எம்.சி.லோகநாதன் ....... 10
- கிட்லரின் தொடக்கமும் வளர்ச்சியும்—2
  தமிழரசன் ................ 13
- பறையும் தமிழும்
  கே.டானியல் ............... 26
- இலக்கியச்சந்திப்பு
  மு.நித்தியானந்தன் ....... 30
- திசையிழந்த மனிதன் ஏறிச் செல்ல என...
  சந்துஷ் .................. 32
- இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை
  மலையாளர் ................ 36
- நடிகவிநோதனுடன் ஓர் சந்திப்பு
  கந்தசாமி .................. 42
- At udfylde tomheden
  Gowsi Sivarajah ......... 44
- Will Peace Elude Us Once More?
  A. J. ......................... 46
- மதம்
  பிரணவி குணசீலன் ..... 48
- அஞ்சல்கள் ............................... 52
- சற்று முன்னர் வரை
  செழியன் .................. 54
- குற்றமற்றவர்கள் மட்டுமே கல்லெறியலாம் ............... 55
- Youth, oh it can burn hills! ... பின் அட்டைக் கவிதை





Redaktion :
**T.Sathyadas**
Redigering :
**M.S.Kandasamy**

முன்னட்டைக் கவிதை
மூலம் : Niels Hansen Jacobsen
தமிழில் : கரவைதாசன்

பின்னட்டைக் கவிதை
மூலம் : கலைச்செல்வன்
ஆங்கிலத்தில்: மணி சுப்ராயன்

அன்பளிப்பு:
பிரதி ஒன்று - 25Dkr, வருட சந்தா - 100Dkr (டென்மார்க் மட்டும்)
(நான்கு பிரதிகள் தபாற் செலவு உட்பட)



தொடர்புகளுக்கு:
Akal
Dalgaardsvej 271,
6600 Vejen.
Denmark
e-mail: karavaithasan@yahoo.dk
Phone: 0045/ 41427562
www.dantamil.com/ini



இலங்கை, இந்தியா இலவசம்.
காசோலை அனுப்பவேண்டிய
வங்கியும் இலக்கமும்:
Thavarasa Sathyadas
DanskeBank
6600 Vejen
Denmark.
A/C 3737090698




படிப்பகம்

www.padippakam.com

# ஏ. ஜே. எனும் ஆளுமை மிக்க ஆகிருதி

மேமன்கவி

ஆளுமைமிக்க ஆகிருதி
ஒன்றின் மரணம் தரும்
மௌனம் —
அது அதன்
உடலின் நிரந்தர உறக்கம்
அதுவே விழிப்பாகி....
விரிந்த மேசையின் பரப்பில்
ஒடுங்கிய புத்தக அடுக்குகளில்
இணைய உலாவிகளின் முடக்கங்களில்
உரத்துப் பேசத் தொடங்கும் தருணமிது!
"எதற்குமே உரிமை கோராத
ஞானம்" பெற்ற
ஆகிருதியின் ஆக்கங்களுக்கே
அது சாத்தியம்.
அதன் —
திறன்களின் மீது
பாய்ச்சப்படும் வெளிச்சம் தரும்
புலர்வு
அருகே இருந்த மூளைகளில்....
பேசும் வார்த்தைகள் மௌனமாகிப் போக —
எழுதிய வார்த்தைகள் போல்
வாழ்ந்து போன வாழ்வு
அந்த புலர்வின் பிரகாசத்தில்
உரத்து வாசிக்கப்படும்.
"ஏ. ஜே." எனும்
மறையாத ஆளுமைமிக்க
ஆகிருதியும்
அதுவான ஒன்றுதான்!





படிப்பகம்

www.padippakam.com

# ரோஸா பார்க்
# நிறவாதத்திற்கு எதிரான போராளி

*எம். ஏ. ஜே.*

**சமரசத்துக்குத் துணை போகாத போராளியைத் தோற்கடிப்பது எளிதல்ல**



'இன்றைய நவீன சமூகவுரிமைச் சட்ட இயக்கத்தின் அன்னை' என்று அழைக்கப்பட்டு வந்த ரோஸா லூயிஸ் மைக்கலி பார்க் அவர்கள் காலமாகி விட்டார். அவர் தற்போது எம்மோடு இல்லைத்தான்.

ரோஸா பார்க் அவர்கள் பெப்ரவரி 4, 1913இல் ருஸ்கி, அல்பமா என்ற இடத்தில் அமெரிக்காவில் பிறந்து அவரது சகோதரருடனும் தாயுடனும் பேரன், பேத்தியுடனும் சிறிய பண்ணையொன்றில் வளர்ந்து வந்தார். ஆபிரிக்க - அமெரிக்கர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு அறையைக் கொண்ட பழைய பாடசாலை ஒன்றில்தான் இவர் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். தரம் ஆறின் பின் மொன்கொமெறியில் ஐந்து வருடங்கள் கல்வி பயின்றார். இதன்பின் நோயான தனது பேத்தியாரைப் பராமரிக்கும்படி பணிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து அவரது தாயாரைப் பராமரிக்கும்படி பணிக்கப்பட்டார். 1932இல் சமூகவுரிமைச் சட்ட நடவடிக்கையாளரான றைமொன் பார்க் அவர்களை மணமுடித்தார்.

ஒரு இனத்தினது தலைவிதியை மாற்றியவர் ரோஸாபார்க் அவர்கள். சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பாக 1955ம் ஆண்டு மார்கழி மாதம் 1ம் திகதி ஒரு நீண்ட களைப்பான வேலைநாளின் பின் பேருந்து ஒன்றில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது சக பிரயாணியான வெள்ளையின ஆணிற்குத் தனது இருக்கையைத் தர மறுத்தார். அப்போதெல்லாம் வெள்ளை இனத்தவர்களுக்குத் தான் பேருந்தில் இருக்கைகளுக்கு முதலிடம். இப்படியாகத் தன்னின கறுப்புநிற மக்கள் ஒடுக்கப்படுவதைக் கண்டு. 'கீழ்ப்படிய மறுப்பு' என்னும் செயலை முதலில் ரோஸா பார்க் அவர்கள் கையிலெடுத்தார். விளைவு, இதற்காக இவர் கைது செய்யப்பட்டு அபராதமும் விதிக்கப் பட்டது. இச்செயலினால் சீற்றமடைந்த கறுப்பின உரிமைவாதிகள் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் சாத்வீகப் போராட்டத்தினைத் தொடங்கினார்கள். மொன்கொமெறி போக்குவரத்துச்சபையின் வாகனங்களை வீதியில் ஓடவிடாது தடுத்து பகிஷ்கரிப்புச் செய்தனர். தொடர்ந்த 382 நாட்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் போக்குவரத்துச்சபை பெரும் நட்டத்தினைச் சம்பாதிக்க வேண்டி ஏற்பட்டது. முடிவில் போக்குவரத்து வாகனங்களில் இனப்பாகுபாடு காட்டக் கூடாதென நீதிமன்று தீர்ப்பு வழங்கியது. பின் 1964இல் அமெரிக்க மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட சமூகவுரிமைச் சட்டத்தினால் தென்மாநிலங்களிலிருந்த இனப் பாகுபாடு முற்றிலும் ஒழிக்கப்பட்டது.

ரோஸா பார்க் அவர்கள் தொடர்ச்சியாக பல்வேறுபட்ட சமஉரிமைப் போராட்டங்க ளில் பங்கேற்றார். NAACPஇனது செயலாளராகவும் பின் NAACPயினது இளைஞர்கழக ஆலோசகராகவும் நீண்ட காலம் கடமை புரிந்தார். தொடர்ந்து வெள்ளை மேல்நிலைவாதிகளின் தொல்லைகளினால் இவர் அலபாமாவிலிருந்து இடம்பெயர்ந்து டெற்றொயிற் என்னும் நகரில் தனது இறுதிக்காலம் வரை வாழ்ந்து வந்தார்.

இவர் Quiet Strength என்னும் நூலில் நிறவாதத்தினால் தான் பட்ட துன்பங்கள், அவலங்கள், அவமானங்கள்பற்றி நிறையவே பதிவு செய்துள்ளார்.

'சமரசத்துக்குத் துணை போகாத போராளியைத் தோற்கடிப்பது எளிதல்ல' என்ற கூற்றிக்கு ரோஸா பார்க் நல்லதோர் உதாரணம்.



படிப்பகம்


www.padippakam.com

# Fra Jaffna til Jyllinge

## Tamilernes integrations succes i Danmark

Skrevet af Ramanan. Balasubramaniam,
Mobilitet

Da tamilerne i sin tid kom til Danmark, var de også villige til at tage alle mulige jobs bare for at komme ind på arbejdsmarkedet. Mange startede derfor med at have et beskidt og lavtlønnet job, hvorefter de langsom steg op ad lønningstigen, eftersom de tilegnede sig yderligere kvalifikationer undervejs. Denne jobmobilitet og villighed til at finde job indenfor den lavtlønnede og ufaglærte sektor har spillet en rolle for, hvorfor det er lykkedes mange at være i et job. Det samme kan man sige, om deres lyst til at flytte til andre byer og landsbyer for at lede efter jobs. Tamilerne er meget mobile, hvad angår at flytte mellem landsdelene for at finde jobs. Da færgeruten mellem Rødby og Puttgarden blev reduceret, mistede en del tamilere deres job på færgeoverfarten, og mange af dem har senere valgt at flytte til andre byer efter nye jobmuligheder. På et tidspunkt valfartede tamilerne til Farum fra Sydsjælland og Falster, fordi der var rygter om, at man nemt kunne skaffe sig et job i Farum. Denne geografiske mobilitet og evnen og lysten til at flytte giver tamilerne nogle langt bedre beskæftigelsesmuligheder.



****Hele 25 % af tamilerne i Danmark er beskæftigede indenfor slagteri og rengøringssektoren. To sektorer som mange tamilere på Sri Lanka vil nægte at finde beskæftigelse indenfor. Mange har brudt med traditionerne for at finde et arbejde. Tamilere kommer fra et kastedelt samfund, hvor de beskidte arbejde overlades til de fattige og lavkaste.*

*Der er næsten ingen tamilere i Danmark, der ser ned på de tamilere, der har et job på et slagteri eller i en rengøringsvirksomhed. Tamilerne har brudt deres traditioner og forældet normer for at komme i arbejde.******



படிப்பகம்

www.padippakam.com

## Social konkurrence



Tamilerne kommer fra et uland med begrænsede muligheder for social - og klassemæssig opstigning. Blandt andet derfor eksisterer der en slags socialmotiveret nysgerrighed og jalousi hos mange tamilere, som driver en del af dem til at skaffe sig varer og værdier, som andre i deres nærmeste omgangskreds er i besiddelse af. Denne følelse har sikkert fungeret som en drivkraft og presset en del tamilere til at undersøge de muligheder, som deres venner og bekendte også havde fået. Mange tamilere, særligt mænd, finder et bijob. En del af dem er tvunget til at have et bijob i en periode for at dække de omkostninger, de har fået ved at købe et hus. Andre gør det alene, fordi deres venner også har det. En bankrådgiver i en mindre dansk provinsby, der har en del tamilere som sine kunder, er blevet overrasket over at opdage tamilske familiers indkomst stige, efter de havde erhvervet sig ejendom. Bankrådgiveren havde forventet, at disse familiers forbrugsramme ville falde, efter de havde købt et hus.

## Investeringer i fastejendom

Ejendomskøb er eksploderet blandt tamilerne indenfor de sidste 5 år. De fleste havde ikke forestillet sig at købe et hus for 10 år siden. Mange havde håbet på, at de en dag kunne vende hjem til Sri Lanka og troede på, at den dag var lige om hjørnet. Denne falske og urealistiske drøm har i flere år forhindret mange tamilere i at slå rødder i Danmark, og forhindret dem i at foretage investeringer i Danmark i form af at købe hus. Mange havde i lang tid opfattet Danmark som deres midlertidige hjem, uden at de samtidig havde overvejet, hvordan det ville være at rejse hjem til Sri Lanka. Da de reelt troede på, at de vil rejse hjem, har de fleste enten foretaget små ejendomsinvesteringer i Sri Lanka eller i lande, fx England, som de troede, de vil flytte til i fremtiden.



படிப்பகம்

www.padippakam.com

For de tamilere, der flygtede til Canada og England, har huskøb været den første prioritet. Tamilerne der køber deres første hus allerede efter 3-5 år i landet.

## Danskernes nysgerrighed

Udover tamilernes ihærdighed for at komme ind på arbejdsmarkedet, kan danskernes syn på tamilerne og det syn, som tamilerne i sin tid blev mødt med, også have haft en positiv virkning for tamilernes deltagelse på arbejdsmarkedet. Som bekendt kom de fleste tamilere til Danmark på et tidspunkt, hvor danskerne var meget positive og nysgerrige overfor de fremmede. Mange tamilere stod i kø for at få en dansk kontaktfamilie, og igennem dem fik mange af dem et ekstra vindue og en åbning til det danske samfund. Mange har på den måde etableret venskaber og netværker, som kan have medvirket til, at de fik jobs.



Pic 11. denish

*****I 80ene kunne man som flygtning få en dansk kontaktfamilie. En ordning som Dansk Flygtninge Hjælp administreret. Mange tamilere stod i kø for at få en dansk kontakt familie. De brugte dem til at komme i kontakt med andre danskere.*

*De tamiler, som havde en dansk kontaktfamilie og netværk, opfattet sig selv værende bedre integreret og mere vestlige end andre. Det er status at have danske venner og besøger dem regelmæssigt. ******

## Hvorfor er tamilske kvinder lidt bagud på arbejdsmarkedet.

Hvis vi nu ser på tamilske kvinders deltagelse på arbejdsmarkedet, ligger frekvensen på 49 %. Det vil sige 49 % af tamilske kvinder er i arbejde. Tallet er selvfølgelig dårligt sammenlignet med danske kvinder. Tamilske kvinders beskæftigelsesfrekvens ligger på en tredjeplads sammenlignet med andre etniske grupper, i det at 53 % af vietnamesiske kvinder og 50 % af eksjugoslaviske kvinder er i arbejde.

Ser vi på procenten af tamilske kvinder, der står til rådighed for arbejdsmarkedet, står hele 58 % af tamilske kvinder til rådighed, kun overgået af kvinder fra Vietnam med 60 %.



படிப்பகம்

www.padippakam.com

| Brancher | Sri Lanka | Pakistan | Vietnam | Iran |
|---|---|---|---|---|
| Slagterier | 12 % | 0 % | 8 % | 1 % |
| Anden næringsmiddelindustri | 3 % | 2 % | 8 % | 1 % |
| Fremst. af byggematerialer af metal | 4 % | 0 % | 2 % | 1 % |
| Fremst. af edb-udstyr, el-motorer mv. | 2 % | 0 % | 4 % | 1 % |
| Supermarkeder, kolonialhandel o.l | 2 % | 3 % | 1 % | 2 % |
| Varehuse og stormagasiner | 2 % | 1 % | 1 % | 3 % |
| Restauranter mv. | 2 % | 6 % | 9 % | 6 % |
| Jernbane og busdrift | 1 % | 4 % | 1 % | 3 % |
| Taxi og turistvognmænd | 0 % | 11 % | 0 % | 2 % |
| Post og telekommunikation | 4 % | 4 % | 1 % | 3 % |
| Anden forretningsservice | 2 % | 3 % | 2 % | 5 % |
| Rengøringsvirksomhed | 12 % | 17 % | 4 % | 1 % |
| Folkeskoler mv. | 2 % | 3 % | 1 % | 2 % |
| Hospitaler | 2 % | 3 % | 1 % | 7 % |
| Sociale institutioner for børn og unge | 3 % | 5 % | 2 % | 8 % |
| Sociale institutioner for voksne | 6 % | 3 % | 2 % | 7 % |

Kilde Danmarks Statistik: Indvandre og arbejdsmarkedet 2004

En forklaring på, at ikke flere tamilske kvinder står til rådighed, kunne være, at mange af dem er på barsel. De er enten i gang med at føde deres første eller andet barn. Som det er beskrevet i starten af artiklen her, var det enlige unge mænd, der kom til Danmark i stort tal. De fleste af disse enlige mænd har giftet sig indenfor de sidste 5-8 år med en pige fra Sri Lanka, og de er nu i gang med at etablere familie med børn.

Mange af dem er også i gang med at gennemføre korte uddannelser indenfor omsorgssektoren. De er bedre uddannet fra Sri Lanka end de mænd de blev familiesammenført med.

Hvis det er forklaringen, vil procenten for tamilske kvinders beskæftigelsesgrad stige i løbet af de næste få år, i takt med at mange af dem til den tid vil være færdige med at føde de 2-3 børn, som er tradition at få blandt tamilerne både i Sri Lanka og i Danmark. De vil være tvunget til at komme ud på arbejdsmarkedet. Tvunget af gevinster ved at få job, og tvunget af det økonomiske pres som ligger i at eje et hus.

****I Sri Lanka udgør kvinderne 36 % af landets samlede arbejdskraft.*

*De fleste er beskæftigede indenfor landbrug, i tekstilindustrien, og har arbejde i mellemøsten som tjenestepiger. Mange tamilske kvinder som blev familiesammenført med mænd, der fik asyl, var hjemmegående indtil de blev familiesammenført. Meget få af dem har været i beskæftigelse i Sri Lanka. Alligevel klarer de sig meget godt på det danske arbejdsmarked. De fleste i*



படிப்பகம்

www.padippakam.com


*dag er færdigt med at føde de obligatoriske 2 børn, og er på vej ud af deres barsel. Om et til to år vil antallet af tamilske kvinder på det danske arbejdsmarked stige. ******

## Hvad med fremtiden for tamilerne i Danmark og den yngre generation.

Det er svært at sige noget om, hvordan det vil gå for de unge. Den foreløbige vurdering tyder på, at de tamilske unge ser ud til at fortsætte i deres forældres fodspor. I modsætning til deres forældre, får de fleste unge en uddannelse. Der er omkring 150-200 tamilske unge, der læser på mellemlange - og videregående uddannelser. Dette tal vil blive mangedoblet i løbet af de næste 4-8 år. Hovedparten af dem, som læser en videregående uddannelse, studerer medicin, hvilket er meget populær blandt forældrene og de unge. Pigerne ser ud til at klare sig meget bedre end drengene. 80 % af dem, som studerer medicin blandt tamilerne er piger. Flere piger vælger at bruge deres tid fornuftigt. Mange kaster sig over lektier og bøger for at kompensere for den sociale begrænsning, de bliver mødt med i deres familie, når de bor hjemme. Mange af dem, hvis det lykkedes for dem at komme ind på en uddannelse, vælger at flytte hjemmefra. Drengene derimod misbruger deres status som mænd og bruger en stor del af deres fritid på at hænge ud med vennerne, hvilket går ud over deres studier.

( Pic.13 generation)

Antallet af tamilske drenge der læser på en videregående uddannelse er meget lavt sammenlignet med tamilske piger. En del af drengene har et overforbrug af penge, der måske tvinger dem til hurtig at gå ud og finde et job uden at have en uddannelse.



Hvis de formår at gå i gang med og fuldføre en erhvervsuddannelse, ser fremtiden lys ud for de drenge, som slet ikke har fået en uddannelse endnu.

Selv om en del af de tamilske unge ikke udnytter det utal af uddannelsesmuligheder, som det danske uddannelsessystem tilbyder, tyder intet på, at de vil ende med at være på kontanthjælp. De, af dem, der ikke får en uddannelse, kommer til at være beskæftiget i forskellige jobs indenfor den ufaglærte sektor. Sammenlignet med deres forældres generation kommer den unge gruppe til at bestå af både veluddannet og kvalificeret arbejdskraft.



படிப்பகம்

www.padippakam.com

# நிலையாமை நீள்வாழும் காலமிதேன்!!!

எம். சி. லோகநாதன்



ஊரிடையே ஒருருவம் ஆடிவரும் — அது
பாரிடையே வேரறிந்த முல்லையெனத் தெரிந்துவிடும்
நந்திச் சேறிடையே காலமைந்த முல்லைமகன் — இனப்
போரிடையே புலம் பெயர்ந்து புகழ் பூத்தமகன் — பல
பேரிடையே ஏதுபேர் சேர்ந்தாலும் — முல்லையே...!
உந்தனுக்கு ஏதுதானும் ஈடாமோ இப்புவியில்.

தொல்லையென நினைந்தாயோ எங்களினை
தொல்பொருளாய் மாளுதற்கோ வடதுருவ மண்ணிதனில்
பூக்களிங்கே ஆயிரமாய் பூத்திருக்க — இங்கு
முல்லைமட்டும் கருகியதில் காய்ந்திருக்க — நீ
வேரறுத்துப் போனதென்ன சொல்லு முல்லை.

நீயோ...!
செந்தமிழ்ச் சொல்லுக்கு சொந்தக்காரன்
எங்கள் கந்தக மண்ணறிந்த பந்தக்காரன் — இங்கோ
தமிழ்ப் பண்களெல்லாம் பாவுடைந்து கிடக்கிறதே
உனைப் பிணமென்ற சொல்லறிந்த கணமுதலே
பணம் மட்டும் வாழ்வில்லை என்றறிந்தாய் — நிதம்
மணம் கொண்டு தமிழ் வளர்த்த பெருமகனே.



படிப்பகம்

www.padippakam.com

கௌசியனை எழினியைப் பெற்றெடுத்து — அவர்
எண்திசையும் புகழ்பரப்பப் பாடுபட்டாய்
கனவுகளாய்க் கிடக்குதைய நின் வாழ்வு — நீ
காதலித்துக் கைப்பிடித்த குஞ்சுமனம் உடைத்தெறிந்து
நீ...! பாடையிலே படுத்திருக்கும் பரிதாபம்
பார்முழுதும் கிடக்கிதிப்போ பாடையிலே!
இந்தக் கோடையிலே வந்துனைப் பார்ப்பதற்கு — நாம்
போட்டபடம் சிலவாரம் முன்னாலே — யார்
போட்டபடம் பாடையென வென்றதிங்கே..!? — நாம்
போடும் படம் தோன்றிடுதே கானலென.

எமையெல்லாம் தனித்தொதுங்கி வாழ்ந்தீரோ — இல்லை
உமையெல்லாம் நாமொதுங்கி வாழ்ந்தோமோ...!?
உந்தனது மனதாழப் புதருள்ளே
பதுங்கியது படுத்திக்கும் பூகம்பம் என்றாமோ...!
சிகிச்சையிலே நீ பிழைத்தும் அசைவிலியாய்
படுக்கையிலே ஏன் விழுந்தாய் வாழ்க்கையிலே
சகிக்கவில்லை மதிக்கவில்லை என்றெம்மை
வாய்திறந்து சொல்லுதற்கு தடைகளேதோ...!? — இப்போ
கொலையேதும் செய்தவர்போல் கொடுவாடி — நாம்
தொலைதூரம் தொலைத்த உனை தேடுகின்றோம்.

அன்றொருநாள்...! பஸ்சேறி ரயிலேறி — நீ
தொலைவிருக்கும் எம்மிடத்தே வந்திருந்தாய்
பிள்ளையிவர் முளைப்பயிர்போல் வளர்ந்துவிட்டார்
அள்ளி நீ அவரணைத்து முத்தமழை பொழிந்தீரே
சிறியவர்கள் இளமைபெற நாங்களெல்லாம் முதிர்வோமே
அதன்பாலாய்...! அரியபல கருத்திடையே கலந்தோமே
வற்றாப்பளையோரம் ஓரில்லம் நாமமைத்து
மேனி முடங்கையிலே நாங்களெல்லாம்
சேர்ந்தங்கே பாடையிலும் படுக்கலாமே
மண்ணினிது எமதென்று சொன்னாயே...!

இப்படி நாம் எத்தனை நாள்... உரிமையுடன்
தனித்திருந்து நாம் கதைத்தோம்
நீ சுமந்த புதியசுமை எமக்கேதும் தெரியாதே..!?
இனிப்பேசி என்னபயன் வேதனைகள்தான்மிச்சம்
உமக்கிடையில் முரண்பாடு
முகிழ்விட்டுக் கொண்டதாலோ..!?
மலைவெந்து வெடித்தவராய் கதைத்தீரே சிலநேரம்...!
எமைநொந்து நீ வெடித்த மலைகளிங்கே நிலையற்று



படிப்பகம்

www.padippakam.com

மடைக்கல்லாய் சிதறியிங்கே கிடக்கிறது புலவோரம் — நீ
உடைத்த கல்லைச் சீரெடுத்துச் சிலைகள் செய்ய
நந்திக் கடற்கரைக்கு மீண்டொருக்கால் வாராயோ...!?

பந்திக்கு முந்தாத மனிதன் நீ
கலைப் பணிக்கோ பிந்தாத கலைஞன் நீ
வந்திருந்த துயர்களையும் ஏற்கின்ற கவிஞன் நீ
எந்தவித துட்டரையும் மதித்துநின்ற மனிதம் நீ
தொழிலாள மனிதர்க்கு துணைவன் நீ — அதனாலோ
தொழிலாள தினமின்று ஊர்வலம் நீ போகின்றாய்

ஆயினும்... ஆயினும்
எள்ளிநடை போட்ட காலும்
புள்ளிபோட்டு வரைந்த கையும்
எண்ணமெல்லாம் கருத்தாகச் சுமந்த மனமும்
அவையெல்லாம் சில நொடியில் மடிந்துபோச்சு.

ஆயினும்... ஆயினும்... நீயோ..!
பல பூகம்பத்துக்குச் சொந்தக்காரன் — நீ
வெடித்தவைகள் யாவும் அணையாப் பிளம்புகளே
ஆகவே... ஆகவே... அவையாவும்
ஆறட்டும் அனைத்து மனங்களிலும்
படிமமாய் வாழட்டும் நினைவுகள் உனது
வருமெங்கள் எதிர்கால இனத்திடையே... — அவையாவும்

நண்பனாய்..
கருத்தாளனாய்
பேச்சாளனாய்
எழுத்தாளனாய்
ஓவியனாய்
வெளியீட்டாளனாய்
கவிஞனாய்
ஒரு மனிதமாய்
எல்லாம்... எல்லாம்... எல்லாமாய்

எவரெஸ்ற் மலைகூட அழியுமையா ஒருநாளில்
இது நிலையாமை நீடிக்கும் காலமன்றோ...!

01. 05. 2006



படிப்பகம்

www.padippakam.com

# ஹிட்லரின் தொடக்கமும் வளர்ச்சியும்

**பகுதி — 2**

*தமிழரசன்*

ஹிட்லர் தனது நூலில் தாய் தந்தையர் ஒழுங்கும் கட்டுப்பாடும் ஆழ்ந்த ஜேர்மனிய பண்பாடும் கொண்டவர்கள் என்ற படப்பிடிப்பை நடாத்துகின்றான். ஆனால் உண்மை தலைகீழானது. அன்றைய ஒஸ்திரியாவின் வறுமையும், பிற்போக்கும், பண்பாட்டுச் சீரழிவும், குடியும் அமைதியின்மையும் கொண்ட குடும்பமாகவே அது இருந்தது. ஹிட்லரது குழந்தைப் பருவம் மிகவும் மோசமானதாகவே இருந்தது. ஹிட்லரது அதிதீவிர ஜேர்மனிய பெருமை பேசலுக்கும் ஆரிய இன முரசறைவுக்கும் பின்னால் தனது சொந்த யூத கலப்பு சம்பந்தமான உளவியல் இயங்கியது. தனது யூதத் தொடர்புடைய பிறப்பை மறைக்கும் முயற்சியுமாகும். ஹிட்லரின் பாட்டனார் ஒரு யூதராவார். ஹிட்லரின் தந்தையின் தாயாரான மாக்ட் மரியா அன்னா (Magd Maria Anna) தனது இளவயதில் யூதநிலவுடைமையாளரான பிரயங்க் பேக்கரிடம் பணிபுரிந்த சமயமே அவருக்கு ஒரு குழந்தையை கருவுற்றார். அந்தக் குழந்தையே ஹிட்லரின் தந்தையான அலோயிஸ் (Alois). பின்பு அவன் தந்தையானது வளர்ப்புத் தந்தையான யோகான் கியோர்க் ஹிட்லர் (Johan Georg Hiedler) இந்த வளர்ப்புத் தந்தைகூட ஜேர்மனியர் அல்ல இவரின் மூதாதையர்கள் செக் நாட்டிலிருந்து ஒஸ்ரியாவில் குடியேறியவர்கள். ஹிட்லர் என்ற குடும்பப் பெயர் செக்





படிப்பகம்

www.padippakam.com

பெயர்களான கூட்லர் (Huttler) அல்லது (Hiedler) கீட்லர் அல்லது ஹிட்லரெக் (Hidlarreck) என்ற பெயர்களின் மூலத்திலிருந்து வந்ததாகும். எந்த செக் மக்களை இழிமக்கள் என்று ஹிட்லர் பழித்தானோ அந்த இழிமாந்தரின் பெயரையே அவன் சூடிக்கொண்டிருந்தான். தூய ஆரிய, தூய ஜேர்மனிய இனம் பற்றிப் பேசிய ஹிட்லரின் பிறப்பும் யூதத் தொடர்பும் அவன் காலத்திலேயே சந்தேகிக்கப்பட்டமையால் 1942இல் அவன் கட்டளைப்படி ஹிம்லர் (Himmler) மூலம் தூய ஜேர்மனிய பிறப்பை நிருபிக்கும் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. பின்பு நடந்த நியூரன்பேக் போர்க் குற்றவாளிகள் மேலான விசாரணைகளின் போது அவனின் யூதத் தொடர்பு நிரூபிக்கப்பட்டது. ஹிட்லர் மட்டுமல்ல கோரிங் (Goring), பீல்ட் மார்சல் ஆன எர்ட்கார்ட் மில்ச் யூதத் தொடர்புடையவர்களே. யூதர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்களை மூன்று தலைமுறைக்கு ஜேர்மனியர்களே என்று நிருபிக்கும்படி கோரினர். யூதர்களை அரை யூதர்கள், கால் யூதர்கள் என வகுத்தனர். பாசிசம் இத்தகைய புனிதப்படுத்தப்பட்ட பொய்களிலேயே தன்னை நிறுத்திக் கொண்டது.

1918 நவம்பரில் யுத்தம் முடிவடைந்து ஹிட்லர் முன்சன் நகரில் நுழைந்தபோது “சுதந்திர பயன் குடியரசு” யூத அடியினரான கூர்ட் ஜனர் தலைமையில் இயங்கியது. தொழிலாளர்கள் தொழிற்சாலையைக் கைப்பற்றியிருந்தனர். முதலாளிகள் நகரை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர். பாசிச இராணுவத்துக்கும் தொழிலாளர்கள் படையினைக் கொண்ட புரட்சியாளர்களுக்கும் இடையே மோதல்கள் நடந்தவண்ணம் இருந்தன. இந்த நிலை 1919 பெப்ரவரி 21இல் புரட்சியாளர்கள் பாம்பேர்க் (Bamberg) தப்பிச்சென்று தற்காலிக புரட்சி அரசை அமைப்பதுவரை நீடித்தது. கூர்ட் ஐஸ்னர் ஒரு யூதர், ஜேர்மனிய துரோகி என்று ஹிட்லரைச் சார்ந்த இராணுவப் பாசிஸ்டுகள் பிரச்சாரம் செய்தனர். இச் சமயமே ஹிட்லரின் அரசியல் தொடங்கியது. அப்போது கம்யூனிச எதிர்ப்பு அணிகளான ‘சோவியத் எதிர்ப்பு அணி’ (Anti Bolschewistischen Liga) ஜேர்மனிய தந்தையர் நாட்டுக் கட்சி DUP ‘டிஸ் கொண்டா கூட்டமைப்பு’ உலக ஆபத்து போல்விசம் போன்ற பெரும்பகுதி இராணுவக் கும்பல்களைக் கொண்டு இயங்கின. இந்த அமைப்புகட்கு ‘சீமன்ஸ்’ (Siemens), போர்சிக் (Borsig), அஎஜி (AEG), ஜேர்மனிய வங்கி, ஜேர்மனிய லுக்சம்பேக் நிலக்கரி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் இந்த அமைப்புகளுக்கு நிதியூட்டல் செய்து வந்தன. ‘உலக ஆபத்து போல்விசம்’ என்னும் அமைப்பு 500 மில்லியன் மார்க் நிதிவளத்தைக் கொண்டிருந்தது. எனில் இவைகளின் பின்புலத்தை விளங்கிக் கொள்ள முடியும். ஜேர்மனியின் பொருளாதார நிலைகள் மோசமடைந்து வந்தன. மக்களின் கோபம் எங்கும் வெளிப்பட்டது. 1920இல் மட்டும் 12மில்லியன் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். ஒரு லட்சம் தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்தியிருந்ததோடு, தொழிற்சாலையையும் ஒரு பகுதி தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். புரட்சிக்கான கொதிநிலை எங்கும் காணப்பட்டது. 4 மில்லியனாக இருந்த வேலையின்மை 1931இற்கு இடையில் 6 மில்லியனாக அதிகரித்தது. மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி வேலையற்றோருக்கான உதவித் தொகையில் வாழ்ந்தது. 7/10 பங்கு தொழிலாளர்கள் அரச ஊழியர்களது மாதவருமானம் 100 ரைஸ் மார்க்குக்கும் குறைவாக இருந்தது. வேலையற்றோர் பெறும் வாராந்த உதவிப்பணம் தனிநபருக்கு 5.10 ரைஸ் மார்க்குகளாகவும் ஒரு குடும்பத்துக்கு 17 ரைஸ் மார்க்குகளாகவும் இருந்தது. இந்த நிலைமைக்கு ஒரு சமூக எழுச்சி வழி நடத்தும் நிலையில் ஜேர்மனியின் மிகப் பெரும் தொழிலாளர் அமைப்பான சமூக ஜனநாயகக் கட்சி (SPD) இல்லை. இரண்டாவது பெரிய தொழிலாளர் அமைப்பான ஜெர்மனிய கொம்யூனிச கட்சி தலைமைத்துவ வழிபாட்டில் மூழ்கிக் கிடந்தது.



படிப்பகம்

www.padippakam.com



இதன்மூலம் இந்த இரண்டு பெரும் தொழிலாளர் அமைப்புகளும் நாசி கட்கும் ஹிட்லருக்கும் அரசியல் வெற்றிடமொன்று அமைத்துக் கொடுத்தனர். இந்த அரசியல் போக்கற்ற நிலையிலேயே ஹிட் லரும் NSDAP கட்சியும் தோன் றின. 1922இலேயே ஹிட்லர் முசோலினியைப் பின்பற்றத் தொடங்கியிருந்தான்.1923இல் முசோலினி போலவே வலது கரத்தால் வாழ்த்தும் பழைய ரோமானிய மரபை தனதாக்கிக் கொண்டான். ஹிட்லரை ஜேர்ம னிய முசோலினி எனப் பத்திரி கைகள் அழைத்தன. நாசிகளின் பத்திரிகையான 'மக்களின் கண்காணிப்பாளன்' நீட்சேயின் அடியான 'சிறந்த எதிர்காலத்துக்கான அதிகாலை யாகட்டும்' என வாழ்த்தும் முறையை நாசிகளிடையே தொடக்கி வைத்தது. 1923இல் அடோல்ப் ஹிட்லரின் மோதும் படையினர் இதை எங்கும் பரப்பினர். இப்படையினரே பிற்காலத்தில் SA மற்றும் SS படையினராக மாறினார்கள். 1930களில் இவர்களின் தொகை 400,000 ஆக இருந்தது. 1929க்கு இடையில் ஹிட்லர் இளைஞர் அணி (HJ), தேசிய சோசலிச விஞ்ஞான ஆய்வு அமைப்பு (NSWG), ஜேர்மனிய கலாச்சாரத்துக்கான போராட்ட அமைப்பு (KDKG), பெண்களுக்கான அமைப்பான (DFRH) மற்றும் ஆசிரியர்கள், நீதித்துறை, வைத்தியர்கட்கான அமைப்பு களும் நிறுவப்பட்டு யாவும் NSDAPயின் கீழ் கொண்டுவரப்பட்டன. கிட்லரின் திட்டங் களுக்கு பெருநிறுவனங்கள் தொடர்ந்து நிதி வழங்காவிட்டால் இந்த அமைப்புகளை நாசிகளால் தொடக்கியிருக்க முடியாது. 1930களுக்கு முன்பே நாசிகளுக்கு வருடா வருடம் 70 முதல் 90 மில்லியன் ஜேர்மனிய மார்க்குகள் கிடைத்து வந்தன. 1923ல் நாசிகள் ஜேர்மனிய போராட்ட அணியை தொடங்கியபோது பிறிட்ஸ் தைசன் (Fritz Thyssen) நிறுவனம் மட்டும் வழங்கிய தொகை 100,000 தங்க மார்க்குகளாகும். கிட்லர் பதவிக்கு வருமுன்பு 1932இல் பேர்லினில் மிகவும் ஆடம்பரமான தங்கு விடுதியான நேபல் ஹோட்டலில் தங்கி கூட்டம் நடத்தியதற்கான செலவு 100,000 ஜெர்மனிய மார்க்குகளாகும். எனில் புரட் சியை எழுந்து விடாமல் தடுக்க ஜேர்மனிய மூலதனம் எத்துணை தீவிரமாய் செயற் பட்டது, நாசிகளை வளர்த்தது என்று மதிப் பிட முடியும்.

பெரும் தொழில் நிறுவன உரிமை யாள ரான கூகோ ஸ்டின்னஸ் (Hugo Stinnes) சீமெனற் நிறுவனமான எமில்கான்சர் நிதியு தவியுடன் மட்டுமல்லாது அரசியல்திசை காட்டிகளாகவும் செயற்பட்டனர். குருப், கானியெல், குளொக்னர் நாசிக் கட்சியில் செல்வாக்குக் கொண்டிருந்தனர். அத்தோடு அமெரிக்க கார் தயாரிப்பு நிறுவனமான ஹென்றி போட் 1923லேயே நாசிகட்கு நிதி தந்து வந்தது. 1923இல் ஹிட்லர் சுவிற்சர் லாந்து வங்கியில் இட்ட பணத்தை எடுக்க தானே நேரடியாய் சுவிற்சர்லாந்து போய் வந்தான். அத்தோடு ஸ்பெயின், இத்தாலி, அமெரிக்கா, புடாபெஸ்ட் போன்ற இடங் களில் நிதிகள் திரட்டப்பட்டன. குருப் நிறுவ னத்தின் முன்னாள் நிர்வாகியும் 1923ல் ஜெர்மனிய தூதராக அமெரிக்காவில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தவருமான ஓட்டோ வீட்பீல்ட் (Otto Wiedfeld) நாசிகட்கு அங்கு நிதி சேர்க்க உதவினார். அப்போது ஜெர்மனியில் அமெரிக்க தூதரக அதிகாரி "நவம்பர் புரட்சி மீண்டும் எழும்". எனவே அதை அழிக்க ஒரு சர்வாதிகாரி கண்டுபிடிக்கப்படல் வேண்டும் என்றான். பெரு நிறுவனங்களின் ஆதரவும் ஜெர்மனிய அதிகார இயந்திரத்தின் பாசிச இராணுவ சக்திகளும் நாசிகளுடன் இருந்தனர். 1924ல் ஜெனரல் லூடன் டோர்வ் (Ludendorff), அரச கடற்படைத் தளபதி பிரபல புத்தக வெளியீட்டு உரிமையாளருமான ஏன்ஸ் கிராவ் (Ernst Graf), பெர்லின் பிரைகொவ் (Freikorps) என்போரும் 1918 நவம்பர் புரட்சியை அழித்த எதிர்ப் புரட்சி இராணுவத்தின் தலைவரும் கொம்யூனிஸ்டுக்களை அழித்தும் இழிபுகழ் பெற்றவருமான வால்டர் ஸ்டென்னஸ் (Walter Stennes), ஜெனரல் யோர்க் போன்வாட்டன் பேர்க் (York von Watenberg), ஜெர்மனிய தேசிய இராணுவத்தின் உத்தியோகத்தின் அமைப்பின் தலைவரான அட்மிரல் சுரேடர் (Schröder) போன்றோர் நாசிகளுடன் வெளிப்படையாக உறவு பூண்டு இருந்தனர். அன்றைய ஜெர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கையின் பிரதிநிதிகளும் புரட்சியின் விரோதிகளுமே ஹிட்லரைத் தேர்ந்தெடுத்து பாசிஸ்டுகளின் தலைவனாக ஆக்கிக்கொண்டனர். அன்றைய நாசிகளின் போக்கை மதிப்பிட்டு செங்கொடி பத்திரிகை 1930இல் ஒவ்வொரு முதலாளிகளும் நாசிகளை விலைக்கு வாங்க முடியும் என்று எழுதியது. ஜெர்மனியின் பாசிசம் பற்றிய ஆய்வாளர்களில் ஒருவரான கார்ல் டீச்ரிச் பிராகர் (Karl Dietrich Bracher) எழுதிய 'Deutsche Diktatur' என்னும் நூலில் நாசிகளை வளர்த்தெடுத்த ஜெர்மனிய நிறுவனங்களை ஆதாரபூர்வமாய் ஆராய்ந்துள்ளார்.

அன்றைய புரட்சிகர நிலைமையை துடைத்தழிக்க முதலாளிய சக்திகள் ஹிட்லரை வளர்த்து சக்தி வழங்கி ஆதரித்தனர். "நான் அல்லது குழப்பமே" என்று பிரகடனம் செய்த ஹிட்லர் ஜெர்மனியருக்கு ஒரே கட்சியே தேவை. இந்த உலகுக்கு வீரம் செறிந்த ஜெர்மனிய தேசம் மட்டுமே தேவை என்றும், நான் மட்டுமே இதைச் சாத்தியப்படுத்த தகுதி கொண்ட ஒரே தலைவன் என்றான். இவ்வாறாக பாசிசம் எதிர்க்கருத்தற்ற மிருகத்தனமான முதலாளிய சர்வாதிகாரிகளை வடிவமைத்து வழிநடத்தியது. தன்னைத் 'தலைவன்' என்று அழைக்க வேண்டும் என்ற வழக்கத்தையும் 'ஹிட்லருக்கு வாழ்த்து' தெரிவிக்கும் முறையையும் அவன் தானே கட்டளையிட்டு நடைமுறைப்படுத்தினான். முதலில் கட்சியுள்ளும் பின்பு ஜெர்மனிய மக்களிடமும் பரப்பினான். தொடக்கத்தில் இவனை பலர் கிறுக்கன் (Spinner) என்றே அழைத்தனர். அவனது இராணுவ ஆடையும் பேச்சும் பரிகசிக்கப்பட்டது. ஹிட்லரின் சொந்த வாழ்வு இராணுவத்தனமான நடத்தைகளைக் கொண்டது. குடும்ப வாழ்வு, நண்பர்கள், குழந்தைகள் எதுவுமற்றவனாக இருந்தான். அதிகாரம் பெற்று இருந்த காலத்திலும் நண்பர்களைப் பெறாதவனாக கட்டளைக்கு கீழ்ப்படியும் ஆட்களால் நிரப்பப்பட்டு இருந்தான். சாரதிகள், செயலாளர்கள், மெய்ப்பாதுகாவலர்கள் என்பது தான் அவனது வட்டமாயிருந்தது. வெறுப்பு, சந்தேகம், கோபம், அவநம்பிக்கை, அதிதுணிவு இவை கொண்ட உளவியல் குளறுபடிகளால் வழிகாட்டப்பட்டவனாகவே அவன் செயற்பட்டான். 1932இல் டிசம்பர் மாதம் NSDAP பிளவுபடும் நிலை தோன்றியபோது "கட்சி பிளவுபட்டால் அடுத்த 5 நிமிடத்திலேயே தற்கொலை செய்து கொண்டு விடுவதாக" அவன் கோபால்சை பயமுறுத்தினான். 1938இல் அவனைக் குண்டு வைத்து கொலை செய்யும் முயற்சியில் இருந்து தப்பியபோது பின்வருமாறு சொன்னான். "என்னுடைய வாழ்வு முடிந்திடுமாயின், என்னைப் பொறுத்து என்னால் சொல்ல முடியும்; நான் கவலைகளிலிருந்தும், உறக்கமற்ற இரவுகளிலிருந்தும், கடுமையாக நரம்பை வாட்டும் துயரங்களிலிருந்தும் விடுதலை கிடைத்திருக்கும். ஒரு மணித்துளியில் யாவும் தீர்க்கப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

அமைதியும், சாந்தியும் கிடைத்திருக்கும்." இங்கு ஹிட்லரிடம் புலப்படுவது எதிர்கால மின்மையும், அவநம்பிக்கையும் கொண்ட வெறுமையும்தான். இறுதியாக ஜெர்மனி தோல்வியடைந்து கொண்டிருந்தபோது தன் தற்கொலைக்கு முன்புகூட தான் கைவிடப் பட்டுவிட்டதாயும் எல்லோரும் துரோகி களாகி விட்டனர் என்றும் திட்டினான்.

ஹிட்லர் நவீன முதலாளிய சாதனை கள் யாவற்றையும் பயன்படுத்தியே பாசி சத்தை வளர்த்தெடுத்தான். ஜெர்மனியப் பெருமைகளை அதன் நடுவே நிறுத்திய உலக மேலாதிக்கக் கனவை வளர்த்தான். மறுபுறம் நீட்சேயைப் போன்று நவீன சமூ கத்தின் வளர்ச்சி, தொழில்நுட்பம் போன்ற வைகளையும் முதலாளியத்தையும் கொச் சையாய் பழைய இயற்கை வாழ்வுக் கனவு களில் மூழ்கித் தத்தளித்தான். "மகான் களுக்கும், மேதாவிகளுக்கும் மகிமை யிருந்த காலத்தைவிட்டு வர்த்தகர் களையும், அதிகாரிகளையும் புகழும் காலத்தில் வாழ்வதற்காய் தான் வருந்து வதாகவும் தேசங்கள் வர்த்தக ஸ்தாபனங் களாய் மாறிவிட்டன, தான் 100 வருடங்கள் முன்பாகப் பிறந்திருக்கக்கூடாதா?" என்று நீட்சேயை ஒத்து வருந்துகிறான். ஹிட்ல ரதும் அவன் சார்ந்த பாசிஸ்டுகளதும் மார்க் சிய எதிர்ப்பு நிலையை கண்டுகொள்ள முன்பு இக்கருத்தியல் அடிப்படைகளை தீவிரமாய் கோரி நின்ற அன்றைய ஜெர்ம னியின் ஏகாதிபத்தியப் பொருளாதாரம் அதன் வாழுவதற்கான கடும் போராட்டங் களையும் கருத்தில் கொள்ள வேண்டும். 1918 நவம்பர் புரட்சி வீழ்ச்சியின் பின்னரும் முன்னரும் பலவித சோசலிச மற்றும் சோவி யத் எதிர்ப்புக்குழுக்கள் இயங்கி வந்தன. பலவிதமான சோசலிசங்கள் பேசப்பட்டன. 1918இலேயே போல்சுவிக்கு எதிர்ப்பு அணி தோன்றிவிட்டது. மார்க்ஸின் சோசலிசத் திலிருந்து விடுபட்ட 'தேசிய சோசலிசம்' பற்றி ஹிட்லருக்கு முன்னரே ஒஸ்வால்ட் ஸ்பென்சர் பேசி வந்தான் அவன் அதை 'பிரஸ்சியர்களும் சோசலிசமும்' என்ற நூலில் வெளியிட்டான். மற்றொரு பாசிஸ்ட் சிந்தனையாளரான ரூடோல்வ் யுங்ஸ் 'தேசிய சோசலிசம்' எனும் எழுத்தைக் கொண்டு வந்தான். மான் (Man) நிறுவனத் தைச் சேர்ந்தவனான பவுல் டூபெல் 'ஜெர்ம னிய சோசலிசம்' என்ற நூலை வெளிக் கொணர்ந்தான். இவர்கள் முதலில் பெரு நிறுவனங்களுடனும் பின்பு நாசிகளுடனும் சங்கமமாயினர். சோசலிசம் இன்றி எந்த அரசியலும் மக்கள் மத்தியில் எடுபடாத நிலையில் அதை திரித்து சிதைத்து விளக் குவதும் அதன் வர்க்கப் பார்வையை இல் லாது ஒழிப்பதுவுமே இவர்களது போக்காக இருந்தது. DINTA என்ற பெயரில் இயங்கிய சமூக ஆய்வு நிறுவனம் தொழிலாளர் அமைப்புகட்கு எதிராக செயற்பட்ட மிக முக்கிய அமைப்பாகும். இந்த சகல அமைப்புகளதும் சிந்தனைப்போக்குகளதும் பிரதான அம்சம் தொழிலாளர், யூதர், மார்க் சிய எதிர்ப்புக் குணமாகும். தொழிலாளர் இயக்கங்களில் யூதர்களே பெரும் பகுதி யாய் முக்கியமாய் இருந்தமையால் யூத எதிர்ப்பானது மார்க்சிய எதிர்ப்புக்கு சமமாக விதைக்கப்பட்டது.

இத்தகைய போக்குகளைக் கிரகித்துக் கொண்டே ஹிட்லர் அரசியல் அரங்குக்கு வந்தான். 1918 நவம்பர் புரட்சியாளர்களை 'நவம்பர் குற்றவாளிகள்' என்று குறிப்பிட்ட கிட்லர் அப்புரட்சியை ஆதரித்த 'ஜெர்மனிய மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் துரோகி கள்' என்று வர்ணித்தான். 1924இல் நீதிமன் றத்தில் ஹிட்லர் மீதான சதி வழக்கு விசாரணை நடைபெற்றபோது ஜெர்மனிய தேசிய வீரனைப்போல் பாவனை செய்த தோடு "மார்க்சியத்தை துடைத்தளிப்பதே தனது நோக்கம்" என்று பிரகடனம் செய் தான். சதிப் புரட்சி வெற்றி பெற்று இருப்பின் நவம்பர் புரட்சியாளர்களை கைது செய்து 3 மணி நேரத்துள் விசாரித்துத் தண்டனை வழங்குவது, யூதர்களை அரசு மற்றும் பொதுச்சேவைகளிலிருந்து உடன் அகற்றி பாராளுமன்றத்தைக் கலைப்பது என்பது ஹிட்லரின் திட்டமாக இருந்தது. நீதிமன் றத்தில் அவன் ஜெர்மனியரைப் போலவே சிந்திக்கும், உணரும் ஒரு மனிதன் என்று



படிப்பகம்

www.padippakam.com

மெச்சப்பட்டான். ஹிட்லர் மாக்சியத்தை எதிர்த்துக் கொண்டே, சோசலிசத்தை பழித்துக் கொண்டே உயர் ஜெர்மனிய மக்களுடன் இணைந்த சோசலிசம் பேசினான். இவனது தேசிய சோசலிசமானது இவனுக்கு முன்பே பல பாசிச குழுக்களால் பேரப்பட்ட ஜெர்மனிய வகைப்பட்ட தேசிய சோசலிசப் போக்குகளின் தழுவலாகவே இருந்தது. மார்க்சியம் யூதர்களால் மேற்குலகையும் ஆரியக் கலாச்சாரத்தையும் வெல்லவென்றே படைக்கப்பட்டது என்று, நீட்சே போன்றோரின் கருத்தைப் பேசிய ஹிட்லர், "மார்க்சியத்தின் மனித குலம் என்ற பிரகடனம் ஜெர்மனிய மக்கள் என்ற அடையாளத்தை அழித்துவிடும். எனவே அதனது சர்வதேசியம் மற்றும் ஜனநாயகம், சமாதானம் இவைகளோடு தொடர்புடைய இயக்கங்கள் அழிக்கப்படல் வேண்டும். அதனிடத்தில் ஜெர்மனிய மக்கள் தேசிய அரசு அமைக்கப்படல் வேண்டும்" என்று என்னுடைய போராட்டத்தில் ஹிட்லர் குறிக்கின்றான். "உலகம் முழுவதும் பரந்து வாழும் யூதர்கள் உலக யூத ஆதிக்கத்தைப் படைக்கவே சர்வதேசத்தை தேர்ந்தெடுத்துள்ளனர். ஜெர்மனிய இனத்தின் எதிர்காலம் பற்றிய கேள்வியானது மார்க்சியத்தை அழிக்கும் கேள்வியுடன் தொடர்புடையது" என்று தொடர்கிறான். ஹிட்லர் தனது கட்சிக் கொடியை மார்க்சிய இயக்கங்கள்போல் சிகப்பு நிறமாக தேர்ந்தெடுத்தமையும் சோசலிசத்துக்குப் பதிலாக தேசிய சோசலிசத்தை உச்சரித்தமையும் சோசலிச சிந்தனைப் போக்கின் செல்வாக்கையும் சக்தியையும் சூறையாடும் சிதைத்தழிக்கும் நோக்கில் ஆகும். ஜனநாயகம் என்ற குட்டையில்தான் மார்க்ஸின் கிருமிகள் உற்பத்தியாகின்றன. மார்க்ஸின் யூதக் கொள்கையானது நீதியும் நாகரீகமும் கொண்ட மனிதவாழ்வின் அத்திவாரத்தையே தகர்த்துவிடும், எனவே இன்று மேற்கு ஐரோப்பாவில் அனுட்டிக்கப்படும் ஜனநாயகம் மார்க்சியத்துக்கு தொடர்பாகவே கருத வேண்டும். சகல இடதுசாரிப் பத்திரிகைகளையும் தடைசெய்து சகல சோசலிஸ்ட்டுகளையும் கைது செய்ய வேண்டும். என்னைத் தவிர வேறு எவரும் தேசிய சோசலிசப் புரட்சிக்கு தகுதியுடையவர்கள் அல்ல எனும் ஹிட்லர், சகல அரசியல் சிந்தனைகளையும் மாற்றுக் கருத்துக்களையும் மறுத்து பாசிச மனித ஒழுங்கை, சிந்தனை வடிவத்தை பரப்புகின்றான். ஜெர்மனியில் உள்ள 18 மில்லியன் மார்க்சியவாதிகள் அதனுள் அடங்கும் 14 முதல் 15 மில்லியன் வரையிலான சோசலிஸ்டுகள் எம் தந்தையர் நாட்டுக்கு ஆபத்தானவர்கள். இவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பது ஹிட்லரின் நாளாந்தக் குரலாக இருந்தது. தேசிய சோசலிசம், போல்சுவிசம் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யும் நிலையில் உலகம் உள்ளது என்றான்.


ஜெர்மனியர்களை சோசலிசமயமாக்குதல் பற்றிப் பேசிய ஹிட்லர் ஜெர்மனிய தனிச் சொத்துடமையை தேசியமயமாக்குவது பற்றியோ உழைக்கும் மக்களின் அதிகாரம் பற்றியோ பேசியதில்லை. மாற்றாய் ஜெர்மனிய முதலாளிய சக்திகளின் விருப்பங்களையே பேசினான். "ஜெர்மனியின் தொழில் நிறுவனங்களை அழிக்க எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லை" என்று மேலும் எழுதுகின்றான். மார்க்ஸின் சர்வதேசியம் ஜெர்மனியின் தேசிய சீரமைப்பை எதிர்க்கும் கோடிக்கணக்கானவர்களை உருவாக்கியுள்ளது. தொழிலாளிகள் முதலாளிகளை எதிர்த்து நிற்பதென்பது முடியாத காரியம். தொழிற்சங்கங்கள் தேசியப் பொருளாதாரத்தை சேதப்படுத்துகின்றன என்று போராடும் தொழிலாளர் அமைப்புக்களை என்னுடைய போராட்டத்தில் தாக்குகின்றான். மார்க்ஸின் சிந்தனை கொள்ளை நோய், அதனது நோக்கம் யூதர்கள் அல்லாத தேசிய அரசுகளை அழிப்பதுதான் என்கின்றான். தேசியம், தேசம் என்பன சமூக வளர்ச்சியில் தோற்றம் பெற்றவையே, எதிர்காலத்தில் அது மறையும் நிரந்தரமான ஒன்றல்ல என்பது பாசிசப் புரிதலாகும். தேசிய அரசுகள் என்பன என்றென்றைக்குமானதாய் விளங்கியது, தேசிய அரசுகளின்



படிப்பகம்

www.padippakam.com

உருவாக்கம், பொருளாதாரத் தனிமை, குறுகிய வட்ட உற்பத்தி உறவுகள், தந்தை வழியான விவசாய சமூகத் தொடர்ச்சி, குடும்பங்களின் இறுக்கம், இவைகளைத் தகர்க்கத் தொடங்கியது. உற்பத்தி வளர்ச்சி, போக்குவரத்து, மனிதர்களிடையேயான தொடர்பு, வர்க்கம் சார்ந்த போக்குகள் தீவிரமடைதல் என்பன தேசிய அரசுகளை அடுத்த கட்டத்துக்கு தொழிலாளர்களின் எழுச்சிக்கும் சர்வதேசியத்துக்கும் நகர்த்தின. ஜெர்மனியானது தனது தேசியக் கடமைகளை முடித்துக்கொண்டு சர்வதேசியத்துக்கு வந்து கொண்டிருந்த சமயமே ஹிட்லர் மீண்டும் ஜெர்மனிய மேலாண்மையின் பெயரால், ஜெர்மனிய தேசியப் பெருமையின் பெயரால் ஜெர்மனிய ஆக்கிரமிப்புக்கு உலக ஏகாதிபத்திய சகாப்தத்துக்கு மக்களை தகவமைக்கின்றான்.




இங்கு ஹிட்லர் பேசும் ஆரிய நீதி, ஜெர்மனிய நீதியானது மனிதகுலத்துக்கான நீதியல்ல, அவனது ஜெர்மனிய உரிமையும் பெருமைகளும் மனிதகுலத்தினது உரிமைகளோடும் பெருமைகளோடும் சம்பந்தமற்றவையே. அவனது அறிவின் ஆட்சி, உயர் இனத்தினது ஆட்சி என்ற இனவெறிப் பிதற்றல்கள் ஜெர்மனியர்கள் மனிதகுலத்தின் அங்கம் என மறுக்கும் போக்கே. ஆரியரோ, ஜெர்மனியரோ இவர்கள் பல்லினங்களைக் கொண்ட மனித சமுத்திரத்தின் துளிகளே, பிரிவுகளே தவிர அவை எந்த விசேட தன்மையும் உயர்வும் கொண்ட மக்களினமல்ல. ஜெர்மனிய மக்களின் சமூக பொருளாதார வாழ்வு நவீன உலகில் பல நூறு மற்றைய மக்களின் சிந்தனைக் கொடையினாலும் உறவுகளாலும் செழுமைப்பட்டுள்ளதே மானுடவியல் சார்ந்த உண்மையாகும். தேசிய அரசுகள் தமது போக்கில் பெற்றெடுத்த தேசிய சமுதாயம், தேசியப் பொருளாதாரம், தேசிய ஒற்றுமை, தேசிய நீதி என்பனவற்றை ஏகாதிபத்திய சகாப்தத்தில் பாசிச ஆக்கிரமிப்பு கைப்பற்றப்பட்டு ஹிட்லர் பாவிக்க முனைந்து படுதோல்வி அடைந்தான்.

1923இல் 3000 பேரைக் கொண்டிருந்த 'கிட்லரின் மோதும் படையினர்' கொம்யூனிஸ்டுக்கள், தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களுக்கெதிரான பயங்கரவாதத்தில் இறங்கியது. 1932க்கு இடையில் இது பிறவுண் கலர் சீருடையணிந்த இராணுவத்தையொத்த ஒருங்கமைவு பெற்று SA எனும் பெயரிலான படையாக மாற்றம் பெற்றது. 1932இல் மட்டும் யூலை மாதத்தில் 99 பேரைக் கொன்று 1125 பேரை படுகாயப்படுத்தியது. இப்படை ஹிட்லரின் முன்னணிப் படையாக இருந்தது. இதில் வேலையற்றோர்கள், சமூக விரோத சக்திகள், மத்தியதர சாகச விரும்பிகள் போன்றோரே இடம்பெற்றனர். பெர்லின் உட்பட பெரும் நகரங்களிலும் தொழிலாளர் நிறைந்த இடங்களிலும் ஹிட்லருக்கு ஆதரவு இருக்கவில்லை. தொழிலாளர் தொழிற்சங்களிலும் SPD மற்றும் மார்க்சிய இயக்கத்திலுமே திரண்டு இருந்தனர். ஜெர்மனி முழுவதும் பொதுவாகத் தொழிலாளர்கள் கூடுமிடங்



படிப்பகம்

www.padippakam.com



களாக இருந்த Proletarischen Kneipe தொழிலாளர்களின் அரசியல் வாதிடும் இடங்களாக இருந்தன. ஹிட்லரின் பாசிசப் படையினருக்கு எதிராக தொழிலாளர்களும் எதிர்த் தாக்குதலை பெருமளவு நடத்தினர். ஹிட்லர் பதவிக்கு வந்து, அரசு இயந்தி ரத்தை அவர்களுக்கு எதிராக பாவிக்கும் வரை தொழிலாளர்களின் அணிகள் பாசிஸ் டுகளை எங்கும் எதிர்த்துப் போராடியே வந்தன.

சோவியத் யூனியனை ஹிட்லர் 'சோவி யத் கொலையாளிகள், ஆசியக் கும்பல், யூத போல்சுவிக்குகள், ஸ்லாவியக் கீழ் நிலை மனிதர்கள்' என்று தாக்கினான். நாசிகளின் பத்திரிகையான 'மக்களின் கண்காணிப்பாளன்' சோவியத் புரட்சி கொள்ளை நோயாக எங்கும் பரவுவதாய் எழுதியதோடு அதை யூத அரசியல் புரட்சி யென்றது. வைமர் குடியரசு சோவியத் யூனி யனுடன் அரசியல் வர்த்தக உடன்படிக்கை களைச் செய்தபோது, நாசிகள் தீவிரமாய் அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தனர். "பிஸ்மார்க்கால அரசியல் ரஸ்யாவுடன் தொடர முடியாது. ராஜதந்திர உறவுகள் ரஸ்யாவுக்குப் பொருத்தமற்றது. ரஸ்யா உட்பட அனைத்துக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் வென்று அடக்கப்பட வேண்டி யவை" என்று எனது போராட்டத்தில் எழு தும் ஹிட்லர் பிரிட்டன், இத்தாலி, எமது கூட்டாளிய நாடுகள், ஒஸ்திரியா - ஹங்கே ரியக் கூட்டு, போலந்தின் உதவி இவைக ளுடன் இணைந்து செயற்பட்டால் நாம் ஜெர்மனியர்களின் எதிரியான ரஸ்யாவை வென்றுவிட முடியும். 'ரஸ்ய நிலமானது ஜெர்மனியர்களின் இந்தியா'. ஆனால் அது ஜெர்மனியர்களின் வாழ்விடம் என்கிறான். லெனினை உலக யூதப்போக்கின் ஏஜன்ட் என வசை பாடிய ஹிட்லர், யூதர்கள்போல் போல்சுவிக்குகளும் இரக்கமின்றி அழிக்கப பட வேண்டும். சோசலிசப் புரட்சிக்கு எதிராக இத்தகைய வெறுப்புக் கக்கிய பாசிச நோயாளியான ஹிட்லர் ஜெர்மனிய



படிப்பகம்

www.padippakam.com


மூலதனப் பிசாசின் தீவிரமான பணியாளாக இயங்கினான். ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் தடுத்து நிறுத்த முடியாத வேகத்தில் சோவியத் செம்படை ஜெர்மனியில் ஊடுருவிக் கொண்டிருந்தது. ஹிட்லர் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுடன் இணக்கத்துக்கு வந்து செம் படைக்கு எதிரான இராணுவக் கூட்டு ஒன்றை அமைக்க முயன்றான். தேசிய சோசலிசமா? சோசலிசமா? ஸ்டாலினா? அல்லது நானா? என்பதை மேற்குலகம் முடிவு செய்ய வேண்டிய காலம் வந்து விட்டதாயக் கூறினான். போல்சுவிக் செம் படைக்கு ஜெர்மனி அடிபணிவதைவிட அமெரிக்க, பிரிட்டன் படைகளால் வெல்லப் படுவதையே ஜெர்மனியர் விரும்புவர் என்று கருதிய அவன் அமெரிக்க, பிரிட்டிஸ் அரசு களுடன் உடன்பாடு கண்டு ரஸ்யாவை ஜெர்மனிய எல்லைக்கு வெளியே முதலாம் யுத்த முடிவுபோல் நிறுத்தி, ஜெர்மனியை மேற்கு நாடுகள் கண்காணிக்கும் திட்டத் தைக் கூட அவன் ஏற்கத் தயாராக இருந் தான். ஹிட்லரின் திட்டங்கட்கு அவகாசம் தராத வேகத்தில் செம்படை ஜெர்மனிய நகரங்களை தோற்கடித்து முன்னேறிய போது போல்சுவிக்குக்கு எதிராக மக்கள் போராட்டம் பற்றிப் பேசி வந்த ஹிட்லர் ஸ்ராலினுடன் சமரசத்துக்கு வந்துவிட முயன்றான். செம்படைத் தளபதியான சூக் கோவ் மூலம் ஸ்ராலினுக்கு விண்ணப்பம், மேல் விண்ணப்பம் அனுப்பினான். ஹிட் லரின் தூய ஆரிய சண்டமாருதம், இராணு வத்தனமான சாகசங்கள் இறுதியில் படு கோழைத்தனமான இழிந்த உடன்பாடு கட்குத் தயாராக இருந்தது. எந்தச் சந் தர்ப்பவாதத்துக்கும் தண்டனிடத் தயா ரானது. இதுவே பாசிச வெறியின் உண் மைக் கோபமுமாகும். "வீரர்கட்குப் பதில் சமாதானப் பிரியர்கள் தோன்றிவிட்டார்கள்" என்று யுத்தத்தை எதிர்த்தவர்களை நையா ண்டி செய்த ஹிட்லர், இறுதியில் சமாதா னம் வேண்டி சகல நாடுகளிடமும் அலைந் தான். இரகசிய தூதர்கள் அனுப்பிக் கெஞ்சினான். பாசிசமானது தத்துவரீதியில் அற்பமானது. கேலிக்குரியது. ஜெர்மனிய தேசிய மூடநம்பிக்கைப் புனைவுகளில் எழுந்தது. ஹிட்லர் தனியே யூதர்களையும் கம்யூனிஸ்டுக்களையும் மட்டும் அழிக்க வில்லை ரஸ்யர்கள், போலந்துக்காரர்கள், சிந்தி, ரோம மக்கள், ஜெர்மனியில் வாழ்ந்த சோர்பன் போன்ற சிறுபான்மை இனங்கள், ஜெர்மனிய ஆபிரிக்க கறுப்பின மக்கள், நோயாளிகள், அங்கவீனர்கள் யூதக் கடவு ளாகிய யெகோவாவை பரப்பிய சமயக் குழுக்கள் ஆகியோர் கொல்லப்பட்டனர். 1939 முதல் 1941 வரையிலான காலப் பகுதியில் ஜெர்மனியில் மட்டும் 'உபயோக மற்று உண்பவர்கள்' என்று 100,000 மேல் (உளவியல் பாதிப்புற்றோர், அங்கவீனர்கள்) கொல்லப்பட்டனர். ஜெர்மனிய சிந்தி-ரோம மக்கள் 500,000 பேரில் யுத்தம் முடிந்த போது எஞ்சி இருந்தோர் 5,000 விட குறைந்த தொகையினரே. போலந்தில் 5 வருடத்தில் நாசிகளால் 6 மில்லியன் மக் கள் கொல்லப்பட்டனர். 1941இல் 5-6 மில்லியன் செம்படை வீரர்களில் 3 மில்லி யன் பேர் திறந்தவெளிச் சிறைச்சாலை களில் நோய், பட்டினி இவைகளால் கொல் லப்பட்டனர். மிருகங்கட்கு எறிவது போல் பாண் துண்டுகள் மிகச் சிறுதொகையில் எறியப்பட்டபோது அதைப் பெறப் போராடி மடிந்தனர் பாதிப் பேர்.

யூதர்களை மக்கள்மீதான காசநோயான இனம் 'பபிலோனிய இனம்' என எனது போராட்டத்தில் எழுதும் ஹிட்லர், முதலாம் உலக யுத்தத்தில் ஜெர்மனியர் தோற்ற மைக்கான காரணம் அரசியலிலும் பொது வாழ்விலும் பரவியிருந்த யூதர்களே என்கி றான். ஹிட்லரின் யூத எதிர்ப்புணர்வு பாரம பரிய கிறிஸ்தவ மதம் சார்ந்த யூத எதிர்ப் பின் தொடர்ச்சியாகவும் புதிய பாசிச அரசி யல் சக்திகளின் தேவைகளிலிருந்தும் தோன்றியதே ஹிட்லரின் சொந்த வாழ்வில் பிணக்குகளோ முரண்பாடோ யூதர்களுடன் ஏற்பட்டது என்பதற்கான ஆதாரம் எதுவு மில்லை. மாறாக இவனின் தாயாரின் வைத்தியராக இருந்தவர் ஒரு யூதர் ஆகும். ஓஸ்திரியாவில் - வீயன் நகரில் 1900இல்



படிப்பகம்

www.padippakam.com



முடியும். இவை யூத எதிர்ப்பைத் தளர விட வில்லை. மேற்கு ஐரோப் பிய நாடுகளில் விரை வான முதலாளிய தொழில் வளர்ச்சி, ஜன நாயகத்தின் அறிமுகம் என்பன குறிப்பிடத்தக்க பரந்த மனிதச் சிந்த னையை வளர்த்திருந் தன. தொழிலாளர் இயக் கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் யூத எதிர் ப்பு உட்பட மனித எதிர் ப்புகளை ஊக்குவிக்கும் காரணிகளை எதிர்த்து வந்தன. ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடு கள் யூத எதிர்ப்பின் தொட்டிலாகவும் யூத ஒடுக்குமுறையின் விளைவாக அவர்களின் தனித்துவம் பேணும் போக்கும் மேற்கு ஐரோப்பாவைவிட மேல்நிலையிலிருந்தது.

ஜெர்மனியில் யூதர்களின் வரலாறு 2000 ஆண்டுகளாகும். மத்தியகாலப் பகுதியிலும் பெரும் தொகையான ஐரோப்பியர்கள் கிறிஸ்தவதமத நம்பிக்கைக்கு மட்டுமல்ல யூத நம்பிக்கைக்கும் மாறினர். எனவே கிறிஸ்தவத்தின் இயல்பான போட்டியாள னாக யூத நம்பிக்கை இருந்தது. கத்தோ லிக்கம், மரபுவழிக் கிறிஸ்தவம், புரட்டஸ் தாந்து என்ற பேதமின்றி யூத எதிர்ப்பையே தமது பிரதான பண்பாய்க் கொண்டிருந்தன. இங்கு யூதர்கட்கு எதிராக கிளப்பப்பட்டது மதம் சார்ந்த எதிப்புணர்வே தவிர இனம் சார்ந்த போக்கல்ல என்பதைக் காண முடி யும். ஐரோப்பிய யூதர்கள் யூதமத நம்பிக் கையாளர்களே தவிர செமிட்டிக் இனமல்ல. இஸ்ரேலுடன் தொடர்புடைய யூதர்கள் அல்ல. உதாரணமாய் வொல்காவுக்கும் காவுக்காசுசுக்கும் இடையில் செமிட்டிக் இனமல்லாத டூர்க் மக்கள் யூத நம்பிக்

ஜெர்மனியர்கள் மெல்ல அழிகிறார்கள் என்ற வலதுசாரிக் குரல்கள் எழுந்தன. நகர மேயரும் கிறிஸ்தவ சமூகக்கட்சியின் தலைவருமான கார்ல் லூக்கஸ் யூதர்கள் ஜெர்மனிய இனமல்ல. 'சியோனிஸ்ட்டுகள்' செமிட்டிக் இனம் என்று பேசி வந்தான். இக்காலத்தில் வீயன் நகரத்தில் வாழ்ந்த போலந்து, இத்தாலி, ஸ்லாவிய மக்கள், குரோட்டியர் ஆகியோரது தொகை 5வீதத் துக்கு குறைவானது. யூதர்களது தொகை யும் அச்சமயம் இந்தளவிலேயே காணப் பட்டது. இந்தப் பலமற்ற சிறு மக்கள் பிரிவுகட்கு எதிராகவே வலதுசாரிகள் தாக்குதலைத் தொடங்கினார்கள். எனினும் ஒஸ்திரியாவைவிட அதனுடன் தொடர்பு டைய பல்கன் நாடுகளில் யூத எதிர்ப்பானது இன்னமும் தீவிரமாய் காணப்பட்டமையை அந்த நாடுகளின் வலிமையான விவசாய சமூக உறவுகளிலும் கிறிஸ்தவத்தின் பழமைவாத பண்பிலிருந்துமே விளங்க



படிப்பகம்

www.padippakam.com

கைக்கு மாறியதோடு மேற்கு மற்றும் வட ஐரோப்பிய பகுதிக்கு குடிபெயர்ந்தனர். இந்த டூர்க் மக்கள் கூட்டத்துடன் தொடர்பு டையவர்கள் இத்தகைய யூத நம்பிக்கை யுடன் கூடியதான பல குடிபெயர்வுகள் மத்திய காலப் பகுதியில் இயல்பாக விருந்தன.

ஆனால் ஹிட்லர் தனது எழுத்தில் யூதர்களை யூத இனமாய், செமிட்டி மக்கள் பிரிவாய் வரையறுத்தான் என்பது அவனது வரலாறு. மானுடவியல் பற்றிய புரிதல களை பாசிசத்தின் நலன்களுக்கு பலியிட் டமையே இது காட்டுகிறது. 'யூத இனம் ஜெர்மனியருக்கு எதிரான இனம்' மார்க் சியம் இதை ஒரு புள்ளியிலிருந்து பார்த்து யூதருக்கும் ஜெர்மனியருக்குமான போரை அது வர்க்கப் போராட்டமாய்க் காட்டுகிறது. ஹிட்லர் தொடர்ந்து யூதர்கள் தம் இனம் கலாச்சாரம், வரலாறு, இரத்தம் என்பன மூலம் ஜெர்மனிய இனத்தை அடிமை கொள்ள முயல்கின்றனர். இப்படி ஹிட்ல ரின் மனித விரோத சிந்தனைப் போக்கின் திரட்டல் தொழிலாளர் இயக்கங்களின் மையமாகவிருந்த யூதர்களை நோக்கியே அமைந்திருந்தது. ஜெர்மனிய யூதர்களை பிளந்தெடுத்து தனிமைப்படுத்தி பாசிச அரசைக் கட்டமைப்பதே அவனது உத்தி யாகவிருந்தது. இத்தகைய தந்திரங்கள் அவனுக்கு முன்பே ஜெர்மனியில் தீவிர நிலையில் இருந்தன. முதலாம் உலக யுத்த முடிவில் டுசெல்வ்டோவ் நகரில் தன்னை முதலாளிய எதிர்ப்பாளன் என்று அறியத் தந்த அல்பிரட் புறூனர் யூதர் களற்ற ஜெர்மனிய சோசலிசக் கட்சி தொடங்கினான். நியூரென் பேர்க்கில்; யூலி யஸ் ஸ்ரைசர் ஜெர்மனியத் தொழிலாள ருக்கான தனி அமைப்பைத் தொடங் கினான். பெர்லினில் ஜெர்மனியத் தொழி லாளர் ஊழியருக்கான சுத்தமான ஜெர் மனிய அமைப்பு எழுந்தது. சோவியத் யூனி யனில் ஒக்டோபர் புரட்சியில் புரட்சிக்கு எதிராக சதி முயற்சியில் ஈடுபட்டதாய் கைதாகி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஜெர்மனிய இராணுவ அதிகாரியான எடு வாட் ஸ்டாட்லர் யூத இனமற்ற 'கிறிஸ்தவ சோசலிசம்' பேசியதோடு தொழிலாள வர்க் கத்தை சோசலிசத்துக்கு எதிராய் பாவிக்க முடியும் என்று கருத்துச் சொன்னான். இத்த கைய போக்கினது பிழிவாய் ஹிட்லரது தேசிய சோசலிசம் எழுந்தது. யூதர்களை புரட்சிகரப் போக்குகளிலிருந்து பிரிப்பது தொழிலாளர் அமைப்பின் குலைவிலிருந்து பாசிசத்தைக் கட்டுவது இதுவே ஹிட்லரின் திட்டமாகும்.

யூதர்கள் அன்னிய இனம், மோசமான இனம், அவர்கள் சமயப்பிரிவு அல்ல, தனித் துவம் இழக்காத, இழக்க விரும்பாத இனம், பல இனமக்கள் மத்தியிலும் கலக் காதவர்களாக என்றும் அந்நியர்களாகவே வாழுபவர்கள். இது ஹிட்லரின் எனது போராட்டம் நூலின் தீர்ப்பெழுதலாகும். ஐரோப்பிய யூதர்கட்கு ஒரு பொது மொழி இருக்கவில்லை. பிரிட்டிஸ் யூதர் ஆங்கி லமும், ஜெர்மனிய யூதர்கள் ஜெர்மனிய மொழியும், பிரான்சிய யூதர்கள் பிரெஞ்சு மொழியும், ரஸ்ய, ருமேனிய யூதர்களும் அந்தந்த நாட்டு மொழிகளையே பேசினார் கள். அந்தந்த நாட்டு மக்களாக வாழ்ந் தனர். சிந்தித்தனர். தாம் வாழும் நாட் டையே தாய்நாடாக எண்ணினர். கிறிஸ்தவ மதம் தவிர்ந்த மற்றெல்லாவற்றையும் அவர் கள் ஏற்றுக் கொண்டனர். எதையும் புறக் கணிக்கவில்லை. கடன்கொடுத்து வட்டி வாங்கும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் யூதர்களே என்கிறான் ஹிட்லர். கத்தோ லிக்கம் யூதர்கள் நிலம், வீடு, சொத்துக்கள் வாங்குவதை தடைசெய்திருந்தது. எனவே யூதர்கள் தங்கள் உயிர் வாழ்வுத் தேவை க்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு சிறு சிறு வியாபாரிகளாகவும், இடைத்தரகர்களா கவும் கிராமங்களில் விவசாயிகளிடம் பொருட்களை வாங்கி நகரங்களில் விற் பனை செய்பவர்களாகவும் மாறியிருந்தனர். இவர்களில் ஒரு பகுதி ஏனைய ஜெர்மனியர் களைப் போலவே வட்டித் தொழிலில் ஈடுபட் டும் இருந்தனர். எனினும் இவர்கள் மொத்த யூதர்களின் தொகையில் சிறு பகுதியினரே. பெரும்பகுதியினரான யூதர்கள் விவசாயக்



படிப்பகம்

www.padippakam.com




கூலித் தொழிலாளர்களாகவும், நகர்ப் புறத்தின் தொழிலாளர் பிரிவிலும் இருந் தனர். நெப்போலியன் படையெடுப்பின் பின்பே ரோம் முதல் ஜெர்மனிவரை யூதர் கட்கு சம உரிமையும், சொத்து வைத்துக் கொள்ளும் உரிமையும் படிப்படியாகத் தொடங்கின.

யூதர்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான போர்க்குணத்தை, தனித்துவம் பேணும் போக்கை ஹிட்லர், ஜெர்மனியருக்கு எதி ரான ஆக்கிரமிக்கும் குணம் எனக் காட்ட முயல்கின்றார். யூதர்கள் 2000 வருடங் களாக மாற்றமடையவில்லை. எத்தனை புரட்சி நடைபெற்றபோதும் அவர்களிடம் எந்தப் போக்கும் மாறிவிடவில்லை என்ற குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. யூதர் கள் அசுத்தம் உடையவர்கள், அழுக்கான ஆடைகளை அணிபவர்கள், ஆடைகள் தண்ணீரைக் காண்பதில்லை, துர்நாற்றம் கொண்டவர்கள், உடல் போலவே மனமும் அழுக்கானது என்று ஹிட்லர் பாசிச மதிப் புகள் பெறும் இனவெறியின் மதிப்பீட்டுத் திரட்டலே. ஹிட்லர் சொந்தமாய் உலக மறியா நாட்டுப்புறக் கிராமமொன்றிலிருந்து வந்தவன். அகதிகள், வீடற்றோர் ஆகியோ ருடன் தானே முகாமில் வாழ்ந்தவன். வறுமை, அழுக்கு, துர்நாற்றம், ஒழுங் கின்மை ஆகியவைகளில் தானே உழன் றவன். நாடோடியாய், லும்பனாய் அலைந் தவன். எல்லா மக்களிடமும் சகல ஏழை மனிதர்களிடமும் தொழிலாளர்களிடமும் அன்று வறுமை காரணமாய் காணப்பட்ட ஒரு அம்சத்தை யூதர்கட்கு மட்டுமே உரித் தானதாக ஹிட்லர் கதை கட்டுகின்றான். இத்தகைய பலவீனமான நம்பிக்கைகளில் தான் பாசிசம் தன்னை நிறுத்த முயன்றது. அழகுபடுத்திக் கொண்டது. யூதர்கள் சகல பத்திரிகைகளிலும் எழுதுகிறார்கள். வதந்தி களைப் பரப்புகிறார்கள். ஜெர்மனியரை இகழ்ந்து, சக்கரவர்த்தியை கேவலப்படுத்து கின்றனர். பிரான்சின் நாகரிகத்தைப் புகழ் கின்றார் என்று ஹிட்லர் கூறுவது, தொழி



படிப்பகம்

www.padippakam.com

லாளர் இயக்கங்களிலிருந்த புரட்சியாளர் களின் ஜெர்மனிய மூலதனத்துக்கு எதிராக போரிடுவோரினைத் திரித்து விளக்கு வதற்காக. 1920 பெப்ரவரியில் ஹிட்லர் NSDAPயை தொடங்கிய பின்னர் யூதர்கட்கு எதிராக தொழிலாளர்கள் மத்தியில் இன உணர்வைக் கிளற அவன் முயன்றான். 'யூதர்கள் அல்லாத தொழிலாளர் தலை வன்', 'நாம் ஏன் செமிட்டி எதிர்ப்பாளர் களாய் உள்ளோம்' எனும் தலைப்பிலான வாதங்கள் எங்கும் இடம் பெற்றன. "யூதர் கள் எல்லோரதும் எதிரிகள். யூத சர்வதேச அமைப்புக்கள் உலகை நச்சுப்படுத்து கின்றன" என்ற ஹிட்லரின் வாதத்தின் இலக்கு ஜெர்மனியுள்ளும் சர்வதேசரீதி யாகவும் நாசிகளின் பத்திரிகையான 'மக்க ளின் கண்காணிப்பாளன்' அபாய அறி விப்புச் செய்தது.

"யூதர்களை திருமணம் செய்தலாகாது. அது ஜெர்மனிய இரத்தத்தை களங்கப் படுத்திவிடும். கலப்பற்ற உயர் இனங்களே வலிமையும் ஆரோக்கியமும் உள்ளவை யாய் உள்ளன. சக்தி மிகுந்தவர்களே வாழ்வுப் போரில் வெல்ல முடியும். கோழை களும் நோயாளிகளும் தேவையற்றவர்கள்" என்ற டார்வினிய நிட்கேலிச போக்குகளைப் பேசும் ஹிட்லர் ஒரு சீனனோ, நீக்கி ரோவோ, ஜெர்மனிய மொழியைப் பேசும் காரணத்தால் ஜெர்மனியர்கள் ஆகிவிட முடியாது. ஒரு சமூகத்தை உருவாக்குவது இரத்தமே தவிர மொழியல்ல. ஜெர்மனிய மக்களுக்கு புதியதான வாழ்விடம் தேவை. எதிர்வரும் 100 வருடங்களில் 250 மில்லி யன் ஜெர்மனியர்கள் குடியேறி வாழத் தக்கதாய் அது இருக்கும். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சதுர கிலோமீற்றரும் தூய இரத்தம் கொண்ட மக்களது வாழ் விடமாகும். நாம் புதிய கொலனிகளையும் பிரதேசங்களையும் கைப்பற்ற வேண்டும். உழுது பயிரிடப்படாத ஏராளமான நிலப் பரப்பானது, அவை தம்மைக் கைப்பற்றும் பயன்படுத்தும் பலமுடையவர்களை நோக்கி காத்திருக்கின்றன என்கிறான் ஹிட் லர். இந்தப் பாசிசக் கனவுகள், கற்பனை களை வரலாறு நிராகரித்துவிட்டது. ஹிட் லர் கனவு கண்ட ஜெர்மனிய வாழ்விடம் ரஸ்யாவா? வோல்கா வரையிலுமா? அல்லது பசிபிக் வரையிலுமா? என்ற மதிப்பீடு ஹிட்லரிடம்கூடக் கிடையாது.

1939இல் யூதர்களற்ற மூன்றாவது பேரரசு என்று அறைகூவிய ஹிட்லர் மனித அழிப்பு முகாம்களான ரெபிலிக்கா, சொபிபோர், அவுஸ்விட்ஸ், பூகன்வால்ட் என்பவற்றைப் படைத்தான். 1945இல் ஏப்ரல் 2ம் திகதி ஜெர்மனியிலும் மத்திய ஐரோப் பாவிலும் யூதர்களை ஒழித்துக் கட்டிய தற்கு தேசிய சோசலிசத்துக்கு அனைவரும் நன்றி சொல்ல வேண்டும் என்றான் ஹிட்லர். ஜெர்மனியைவிட 4 மடங்கு பெரிய நிலப் பரப்பைக் கைப்பற்றிய அவன் 1945இல் ஜெர்மனியை பாலைவனத்தில் விட்டுச் சென்றான். 'தூய ஜெர்மனிய இனம்', 'அகண்ட பேரரசு' என்ற சிந்தனை சொந்த மக்களுக்கு அழிவையும், இடிபாடுகளை யும், சாம்பலையும், பிணமலைகளையும், பசியையும், விபச்சாரத்தையும் பரிசாக்கி விட்டுச் சென்றது.

ஹிட்லர் இல்லாவிட்டால் ரஸ்யா, பிரிட் டன், அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடு கள் ஜெர்மனியுள் நுழைந்திருக்கமாட்டா. இஸ்ரேல் என்ற நாடு உருவாகியிராது. 1923 இல் ஜெர்மனியில் கோட்டிங் கென் நகரில் 60 சோதனைக் கூடத்தைச் சேர்ந்த யூத விஞ்ஞானிகள் அல்பிரட் ஐன்ஸ்டைன் உட்படப் பலர் அமெரிக்காவுக்குச் சென்ற தாலேயே அமெரிக்காவுக்கு அணுகுண்டு கிடைத்தது. கொலனிகள் விடுபட்டு கறுப்பு, வெள்ளை, ஆசிய, ஆபிரிக்க மக்களின் மனித சமத்துவம் தொடங்கியது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிசத்தின் பெய ரால் ஸ்டாலினிச அதிகாரத்துள் வந்தன. 1933 ஜனவரி 30ம் திகதி 11:20 மணிக்கு ஜெர்மனிய கவுன்சலராக பதவி ஏற்று, ஜெர் மனியின் வாழ்வும் வெற்றியும் என்னிடமே தங்கியுள்ளது என்ற ஹிட்லர் மார்க்ஸை யும், ஏங்கெல்ஸையும் உருவாக்கித் தந்த தேசத்தை மாபெரும் பேரழிவுக்குள் அழைத்துச் சென்றான்.



படிப்பகம்

www.padippakam.com

# பறையும் தமிழும் :

## கே.டானியல் சொன்ன கதை



**உருவாக்கம்: கே.பி.லிங்கம்**

**தகவல்: மு.சி.கந்தசாமி**

நவரத்தினசிங்கம் இன்றிரவு இறந்துவிட்டார். ஊரிலுள்ளவர்களில் பலர் இச்செய்தியை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நெடுநாளாக எதிர்பார்த்தது ஒன்று நடந்து விட்டது அவ்வளவுதான். மனைவியும் மூன்று பெண்பிள்ளைகளும் அழுது புலம்பும் சத்தம் மாத்திரம் அந்த இரவில் கேட்டுக் கொள்கின்றது. பாவம் அந்த மனிசன் தன் இளமைக்காலத்தில் ரத்த வெறி சிங்கள ஆட்சியில் தமிழரின் விடிவுக்காக பறை தூக்கி அடித்து துக்கம் கொண்டாடியதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லை. இதை சாட்டாக வைத்து அண்ணன், அக்காமார், தங்கை என்றும், உறவினர்கள் என்று பலரும் அவனை ஒதுக்கிக் கொண்டனர். அவன் அவர்களைத் தேடிப் போனாலும் அவர்களால் அவன் ஒதுக்கப்பட்டான். அவன் ஆரம்பத்தில் இவற்றைப் பெரிதுபடுத்தாவிட்டாலும், நல்லது கெட்டதென்று வாழ்க்கையில் வரும்போது வேண்டுமென்றே ஓரங்கட்டப்படுவது ஆரம்பத்தில் மனதிலே பெரிதுபடுத்தப்படாமலிருந்தாலும், அதை நாளடைவில் யோசித்து, யோசித்து மனநோயாளியாகிவிட்டான்.

தமிழ் வைத்தியம், ஆங்கில வைத்தியம் என்று கடந்த மூன்று வருடங்களாக செய்து பார்த்தும் கூடியதே ஒழிய குறைந்தபாடில்லை. இப்போது மூளை பழுதாகி பைத்தியக்காரராகிவிட்டார். இப்போது இவனது அட்டகாசம் தாங்க முடிவதில்லை. சத்தம் போட்டுச் சிரிப்பது, அணிந்திருக்கும் ஆடையைப் பற்களால் கடித்துக் குதறுவதும் ஊர் எடுபடக் குளறுவதும் அன்றாட வழக்கமாகி விட்டது. சில சமயங்களில் அகோரம் தாங்க முடியாமல் போய்விட்டால் பக்கத்து வீட்டுக்காரர்கள் சிலர் இரண்டு மூன்று அடிபோட்டு சங்கிலியால் கட்டி மரத்தோடு கட்டிவிட்டுப் போய்விடுவார்கள். பார்ப்பதற்கு பாவம்தான். என்ன செய்வது? அவனின் நிலமையோ அப்படி. அஞ்சாத சிங்கம் இப்போது அடங்கிப் போய்விட்டது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அரசியல் தொண்டர்கள் என்று இப்போது யாரும் அவர்கள் பக்கம் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

இப்போது சங்கிலிக்கட்டு அவிழ்ந்த நிலையில் அந்த வாங்கில் படுத்தப்பட்டிருந்தது அவனது உடல். மனைவி உடலைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருக்கிறாள். சிலர் இறந்த செய்தியறிந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

மூத்தவள் அந்தக் கிராமத்துப் பள்ளியில் கணித ரீச்சர் வயது முப்பத்தைந்தைத் தாண்டி விட்டது. நடுவில் ஆசுப்பத்திரியில் நேர்ஸ். அவளுக்கும் இப்போது முப்பத்தி மூன்று வயது. கடைசியும் ஒரு ரீச்சர். அவளுக்கும் இருபத்தியெட்டைத் தாண்டிவிட்டது. இவர்கள் மூவரும் இன்னும் திருமணம் செய்யாமல் கன்னிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெண்பிள்ளை என்றாலே நெஞ்சிடி. மூன்று பிள்ளைகளென்றால் கேட்கவும் வேண்டுமா?

கடந்த பல வருடங்களாக மகளுக்கு திருமணம் கேட்டு அறிந்த தெரிந்த இடங்களுக்கு படியேறி வந்தான் நவரத்தின சிங்கம். மாப்பிள்ளை கேட்டுப்போன இடமெல்லாம், "இவரோ..., இந்த பறை அடிச்ச குடும்பத்துக்கோ..?, நாங்களோ..?, பெண் எடுக்கவோ..?" இச் சொற்களைத் தவிர வேறு ஒரு நல்ல வார்த்தை அவனின் காதுகளில் விழவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல தன்னைத் தானே சிந்திக்கத் தொடங்கினான்.

தன்னை இவர்கள் ஏன் இழிவுபடுத்த வேண்டும்?

என்ன தவறு செய்தேன்?

அவனுக்கோ ஒருவரையும் புரிந்து கொள்ளும் நிலையில் மனதில்லை. சிந்தித்துச் சிந்தித்துக் கொண்டே சிரித்தான்.

யாரை..?

இந்த இழிதமிழர்களை.

அவன் அழவில்லை.

சிரித்தான், சிரித்தான், சிரித்துக் கொண்டேயிருந்தான்.

அவனால் சிரிப்பதை நிறுத்த முடியவில்லை. சிரித்துக் கொண்டேயிருந்தான்.

உலகத்தை மறந்தான். மறந்தே விட்டான். ஆம் இப்போது அவன் ஒரு மன நோயாளி. மகளின் திருமணம் நிறைவேறாமை இப்போது அவனின் வாழ்க்கையில் மரணத்தை ஏற்படுத்திவிட்டது.

அப்போது தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்ட காலம். காங்கிரஸ் கட்சி அப்போது சிங்கள அரசின் ஒரு அங்கம். அரசாங்க மந்திரி யாழ்ப்பாணம் வருவதாக அறிந்த காங்கிரஸ் கட்சிக்கோ கொண்டாட்டம். தமிழரசுக் கட்சிக்கோ திண்டாட்டம். மந்திரியையும் பரிவாரங்களையும் மேளதாளத்துடன் பலாலியிலிருந்து அழைத்து வருவதாக முடிவு. தமிழரசுக் கட்சிக்கோ அந்நாளை நிராகரித்து செத்தநாளாக அனுஷ்டிப்பதாக முடிவு. (அவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்ப்பது சகஜம்தான்)

அன்று நண்பகல் மந்திரியை பலாலியில் வரவேற்க காங்கிரஸ் கட்சி பலாலிக்கு சென்று விட்டது. அதேவேளை செத்த நாளாக கொண்டாட முடிவெடுத்த தமிழரசுக் கட்சி முன்னணி இளைஞரோ செத்த நாளாக கொண்டாடுவதாயின் பறை அடிக்க வேண்டும் என முடிவெடுத்தது. விரைந்தான் சிங்கம் திட்டிக்கு.

"டேய் சின்னான்! டேய் வல்லி!"

குரல் கேட்டு இரண்டு பேரும் அந்தக் கொட்டிலுக்குள்ளால் வந்தபோது,

"மத்தியானம் பலாலிக்கு சிங்கள மந்திரி வாறான், அவன் றோட்டால காரிலே வரும்போது நாங்க செத்தவீடு மாதிரி துக்கம் கொண்டாட வேண்டும். எங்களின்ர ஊர்வலத்தில நீங்க இரண்டு பேரும் பறை அடிக்க வேணும். வாருங்கோ என்ர காரில.."

"ஓமாக்கும்"

அவர்கள் பறையுடன் புறப்படத் தயாரான வேளை இன்னொரு காரில் தமிழ் காங்கிரஸ் கூட்டம் வந்திறங்கியது. நவரத்தினசிங்கம் பறைத்திட்டிக்கு வந்த செய்தி இவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

"டேய்!நீங்கள் ஆரும் ஊர்வலத்துக்கு போய் பறை அடிச்சியளோ, எளியவங்களே! இருக்கிற வீடு வாசல் எல்லாம் கொழுத்தி



படிப்பகம்

www.padippakam.com

சாம்பலாக்கிப் போடுவம். எங்களைத் தெரியும்தானே?"

எச்சரித்து விட்டுச் சென்று விட்டார்கள்.

இவர்களுக்கோ இரண்டு பக்கத்தாலும் அடி. இருவரும் பயந்து கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் கொட்டிலுக்கு முன்பு நின்ற நிழல்மரவள்ளி மரத்தின் கீழ் பறைகளை வைத்துவிட்டு இருந்து விட்ட னர். இரண்டு கட்சிக்காரர்களும் வருவதும், போவதும், நிற்பதும், பின் போவதுமாகவே இருந்தனர்.

மந்திரியோ வரும் நேரமாகிவிட்டது. பறை அடிப்பவர்கள் வரவே இல்லை. தனது சொல்லைக் கேட்கவில்லை என்ற ஆதங்கம் மனதில் எழவே மீண்டும் இரண்டு நண்பர்களுடன் கோபத்தோடு திட்டிக்கு விரைந்தான். கோபமும் அடாவடித்தனங் களும் அவனோடு ஒட்டிப் பிறந்தவை. அடிதடி என்றால் அவனுக்குக் கரும்பு மாதிரி. மேல்மட்டத்தில் செல்வாக்கு இருப் பதால் கீழ்மட்டத்திலுள்ள குடிமக்களை அடிக்கடி தட்டிப் பார்ப்பதுமுண்டு.

திட்டிக்கு விரைந்து வந்த சிங்கத்துக்கு, அங்கே சின்னானும், வல்லியும் பறையுடன் நிற்பதைக் கண்டதும் மேலும் கோபம் பீறிட்டு வந்தது.

"என்னடா எளிய சக்கிலியப் பயலு களே! பறை அடிக்கப் போறியளோ! அல் லது நான் உங்களுக்கு அடிக்கவோ? சொல்லுங்கோவனடா.. எளிய பயலுகளே..!"

"ஐயா! எங்களைக் கோவியாதை யுங்கோ.. உங்களின்ர ஊர்வலத்துக்கு வந்து பறை அடிச்சால் எங்களின்ர வீடு வாசல் எல்லாம் கொழுத்தி சாம்பலாக்கி விடுவம் எண்டு வெருட்டிப் போட்டுப் போனவை. நீங்களோ வா! வா! எண்டால் நாங்கள் என்ன செய்யிறது? எங்களுக்கும் எல்லாரும் வேணுமாக்கும். எங்களைக் கோவியாதையுங்கோ.."

அவன் சொல்லி முடிப்பதற்குள் கோபத் தால் சிங்கத்துக்கு உதடுகள் துடித்தன. கால்கள் நிலத்தில் நிற்க மறுத்தன.

"உங்களுக்கு இப்ப நல்ல திமிரடா! இஞ்சே உள்ள கொஞ்சக் கஞ்சிக்கு வழியில்லாத நாயள்! இப்ப சிவப்புச் சட்டைக்காரங்களுக்குப் பின்னாலே சுத்திக் கொண்டு திரியுதுகள். அந்த பொறிக்கி யளின்ர வேலைதானடா இது. நீங்கள் வரயில்லை எண்டாப்போல நான் எடுத்த முடிவை மாத்திப் போடுவன் எண்டு நினை யாதையுங்கோ. தாடா பறையை பறைப் பயலே!"

பறையைத் தூக்கி காருக்குள் போட்டுக் கொண்டதும் புழுதி கிளம்பியபடி கார் ஓடி மறைந்தது. மந்திரி யாழ்ப்பாணக் கோட் டைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு விட்டார். தமிழரசுக் கட்சியின் அந்தச் சவ ஊர்வலம், அந்தப் பெருவீதியால் வந்து கொண்டிருந்தது. வீதி இரண்டு பக்கங் களும் ஜனங்கள் இரண்டு கட்சிகளின் கூத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டி ருந்தனர்.

நவரத்தினசிங்கம் ஊர்வலத்தின் முன் னில் பறையைத் தன் கழுத்திலே தூக்கிக் கொண்டு, பலம் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டு, வழி நடத்திக் கொண்டு அந்தக் கோயில் முகப்பை அடைந்து விட்டார். வந்தவர்களுக்கெல்லாம் பரம திருப்தி. செத்த வீட்டிற்கு நிறைவாக பறை அடித்த வனுக்கு பாராட்டு.

"தன்மானமுள்ள தமிழன்"

"தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா"

"மானம் காத்த தமிழ் சிங்கம், சிங்கள சிங்கக் கொடியை எதிர்த்த தமிழ்ச் சிங்கம், சிங்கம் எண்டால் சிங்கம் தாண்டா."

வீரப்பேச்சில் உச்சி குளிர்ந்து போனான். அன்றைய நாள் அவன் ஒரு வீர நாயகன். முழுத் தமிழ் மக்களின் விடிவுக்காக பறை அடித்ததில் அவனுக்கு பரம திருப்தி..

நாட்கள் செல்லச் செல்ல பறையுடன் அவனது பெயரையும் இணைத்துச் சிலர் அழைக்கத் தொடங்கிவிட்டனர். அது தெரிந் திருந்தும் திருப்பிக் கேட்க முடியாதநிலை. உண்மையும் அதுதான். இப்போதுதான் மெல்ல, மெல்லத் தன்னைத்தானே உண ரத் தொடங்கினான். ஊரில் சிலர் அவனை ஒதுக்கத் தொடங்கிவிட்டனர். நல்லது,



படிப்பகம்

www.padippakam.com

கெட்டது வரும்போது சொல்லாமல் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டது அவனது மனதை சிறிது சிறிதாக வாட்டத் தொடங்கியது. இப்போது அவன் முந்தியது போலல்ல, தனிமையில் நடப்பது, கதைப்பது, சிரிப்பது,என்று ஒரு புதுவிதமான மாற்றங்கள் அவனில் தெரிந்தது.

மூத்த மகளுக்கு திருமண வயதை எட்டித் தாண்டிக் கொண்டிருந்தது. மாப்பிள்ளை கேட்டு, சொந்தங்கள், தெரிந்தவர்களின் வீட்டு வாசற்படி ஏறி இறங்கினான். பலன் ஏமாற்றம் தான்.

“பறை அடிச்சவன் குடும்பத்தில நாங்கள் பெண் எடுக்கவோ..! எளிய பறை தூக்கின பயல், பறை அடிக்கிற வீட்டில போய் மாப்பிள்ளை கேட்க வேண்டியது தானே!”

முகத்திலை அறைஞ்சாற்போல் பலர் சொல்லிக் கொள்வது. அவன் காதில் விழத் தவறவில்லை. இந்த கொடுஞ் சொற்கள் அவனைச் சிந்திக்கச் செய்தது. சொந்தங்களை எண்ணிப் பார்த்தான். கூட வந்த நண்பர்களைத் திரும்பிப் பார்த்தான். தன்னைப் புகழ்ந்த அரசியல் வீச்சாளரைப் பார்த்தான். யாரும் இப்போது அவனருகே இல்லை. தமிழர்களை எண்ணி எண்ணி, சிந்தித்துத் சிந்தித்துச் சிரித்தான். சிரித்தான் சிரித்துக் கொண்டேயிருந்தான்.

என் குடும்ப வாழ்வுக்காகவா பறை அடித்தேன். இல்லை. முழுத் தமிழனும் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தானே, நான் என் குலம், கௌரவம், அந்தஸ்து எல்லாம் விட்டு பறையைத் தூக்கி அடித்தேன். இதற்காகத்தானே நான் ஒதுக்கப்பட்டேன். அதன் விளைவு இன்று வரைக்கும் அவனின் பெண்கள் மூவரும் கல்யாணம் செய்துகொள்ளாமலே கன்னிகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு.

நவரத்தினசிங்கத்தின் உடல் மயானம் நோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருந்தது. வந்தவர்களில் பலர் போகும் வழியில் இடையில் வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். இப்போது கிட்டத்தட்ட இருபது பேர் வரையில் போய்க் கொண்டிருந்தனர். இவன் ஊரில் யார் யாரை எல்லாம் ஒதுக்கிப் பார்த்தானோ அவர்களில் பலர் அவனது சவத்தின் முன்பு போய்க் கொண்டிருந்தனர்.

---

**ஒரு நாவலில் காட்டப்படுவதான காலம், அந்தக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்வு முறை, பேச்சு முறை, பழக்க வழக்கங்கள் நாவலின் கால நகர்ச்சியின் புலப்பாடுகள் , இயல்பான நடைமுறைகளோடு, அந்த நாவலை நிலையியலில் இருந்து இயங்கியல் வரை இட்டு வருதல், அந்தக் கால நடைமுறைகளுக்கேற்ப உலக வியாபகமான பரிமாண வளர்ச்சிக்கு அதன் பாத்திரங்களின் வர்க்க குணாம்சங்களை வெளிக்கொண்டு வருதல் ஆகியவைகளில் நான் தவறியிருக்கிறேனா என்பதனை நாவல் அச்சுக்குப் போகுமுன், பலரிடம் அதைப் படிக்கக் கொடுத்து படிப்பவர்களின் அபிப்பிராயங்களையும், உள்வாங்கிக் கொள்ளுவதில் நான் தவறுதில்லை. அச்சு ஏறுவதற்கு முன் அவைகளைப் படிப்பதற்கு 75 வயதுக்கு மேற்பட்ட ஒருவர், ஒரு குடும்பப் பெண், ஒரு உயர் பள்ளி மாணவன், ஒரு உடல் உழைப்பாளி, வர்க்க சமூக அமைப்பினைத் தெளிவுறப் படித்த ஒருவர் உட்பட குறைந்தது எட்டுப் பேர்கள் வரையிலாவது இருப்பர்.**

**— கே. டானியல் (என் கதை) —**



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கியச் சந்திப்பு : மு.நித்தியானந்தன்

**இலக்கியச்சந்திப்பின் 33வது தொடர் பிரித்தானியாவின் கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் மாதம் 23ம் 24ம் திகதிகளில் 'ஈழத்தமிழ் இலக்கியத்தில் மனித உரிமை' என்ற தலைப்பின் கீழ் நடந்தேறியுள்ளது. அதனையொட்டிய சிறு விவரணத் தொகுப்பிலிருந்து.**

ஐரோப்பாவின் புலம்பெயர்ந்த தமிழர்களின் கலாச்சாரத்தளத்தில் இலக்கியச் சந்திப்பு தீர்க்கமான பங்கினை வகித்திருக்கிறது. ஜேர்மனியில் வெளியாகும் தமிழ் சஞ்சிகைகளின் ஆக்கங்கள் குறித்த விமர்சனக் களமாகவே இலக்கியச் சந்திப்பு தோற்றம் கண்டது. விமர்சன சுதந்திரமும் திறந்த விவாதப் போக்கும் இலக்கியச் சந்திப்பின் அடிநாதமாக அமைந்தன. அரசியலின், இலக்கியத்தின் ஏகபோக கருத்தாடல்களின் சட்டாம்பித்தனங்களுக்கு இலக்கியச் சந்திப்பு பெரும் சவாலாகவே விளங்கியது. அதிகார தர்பார்களின் அகங்காரங்களும் ஆணவ முனைப்புகளும் இலக்கியச் சந்திப்பினை வெற்றி கொள்ள முடிந்ததில்லை. மாற்றுக் கருத்துக்களை திறந்த மனதோடு கௌரவித்து விவாதிக்கும் உயர் பண்பின் தளமாக இலக்கியச் சந்திப்பு செயற்பட்டு வந்துள்ளது. ஜனநாயக மரபுகளைப் பேணியும் தனிமனித சுதந்திரங்களைக் கௌரவித்தும் கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தியும் இலக்கியச் சந்திப்பு அதன் சகல நிகழ்வுகளிலும் செயல்பட்டுள்ளது.

புகலிட இலக்கியம் குறித்த காத்திரமான கருத்துப் பரிமாறல்களின் பட்டறையாக இலக்கியச் சந்திப்புக்கள் கோலம் கொண்டிருந்தன. பெண்ணியம், எதிர்ப்பு இலக்கியம், மலையக மக்கள், முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினை போன்ற அம்சங்களிலும் இலக்கியச் சந்திப்பு தனது கவனத்தை விஸ்தரித்து வந்திருக்கிறது. புகலிடங்களில் வெளியாகும் நூல்களும் ஆக்கங்களும் இலக்கியச் சந்திப்பின் முதன்மை அக்கறைக்குரியனவாக திகழ்ந்திருக்கின்றன.

அரசியலிலும் இலக்கியத்திலும் முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட

**புகலிட இலக்கியம் குறித்த காத்திரமான கருத்துப் பரிமாறல்களின் பட்டறையாக இலக்கியச் சந்திப்புக்கள் கோலம் கொண்டிருந்தன. பெண்ணியம், எதிர்ப்பு இலக்கியம், மலையக மக்கள், முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினை போன்ற அம்சங்களிலும் இலக்கியச் சந்திப்பு தனது கவனத்தை விஸ்தரித்து வந்திருக்கிறது. புகலிடங்களில் வெளியாகும் நூல்களும் ஆக்கங்களும் இலக்கியச் சந்திப்பின் முதன்மை அக்கறைக் குரியனவாக திகழ்ந்திருக்கின்றன.**



படிப்பகம்

www.padippakam.com



செயற்பாட்டாளர்களின் பயிலரங்காக இலக்கியச் சந்திப்பு தன்னை வரித்துக் கொண்டது.

விசாக் கெடுபிடிகளும் பயண ஆவணங் கள் இல்லாத நிலையிலும் கூட எல்லை கடந்து இந்த இலக்கியச் சந்திப்புகளில் ஆர்வலர்கள் துணிச்சலோடு வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இலக்கியச் சந்திப்பு இறுக கட்டமைக் கப்பட்ட அமைப்பு அல்ல. மத்திய குழுக் களும் கிளைகளும் கொண்ட ஸ்தாபனமும் அல்ல. யாப்பின் பாதையில் சென்ற பயண மும் அதற்கில்லை.

இலக்கியச்சந்திப்பினை வெறும் பேச்சுக் கடையாக விமர்சித்தவர்கள் உண்டு. இதனை பூரண அரசியல் இயக்கமாக மாற்றிவிட வேண்டும் என்று அவசரப்பட்ட வர்கள் உண்டு. ஒரு அரசியல் கட்சியின் செயற்பாடுகளை பட்டியல் இட்டு அதனை ஏன் இலக்கியச் சந்திப்பு செயற்படுத்த வில்லை என்று கேள்வி எழுப்பி சந்தோஷப் பட்டுக் கொண்டவர்கள் உண்டு. கூடிச் சந்தித்து, பேசிக் கதைத்து சாதித்தது என்ன? என்ற தராசுப் படிக்கல்லோடு வந்தவர்கள் உண்டு. இலக்கியச் சந்திப்பின் மீது விஷமத்தனமான பரப்புரை மேற் கொண்டு தங்களின் காழ்ப்புணர்வுகளை கக்கியவர்கள் உண்டு. ஏகபோக அதிகார மையங்களின் எதிர்ப்புக் கணைகளை இலக்கியச்சந்திப்பு தொடர்ச்சியாகச் சந்தித்திருக்கிறது.

பல்வேறு விமர்சனங்கள், எதிர்ப்புகள், பழிப்புரைகள், பரப்புரைகள் அனைத்தை யும் மேவி ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், நெதர்லாந்து, இங்கிலாந்து, டென்மார்க், கனடா ஆகிய நாடுகளில் இதுவரை 32 இலக்கியச் சந்திப்புகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தமை புகலிட இலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்கதாகும். 1988ம் ஆண்டு ஜேர்மனியில் கேர்ண நகரில் ஆரம் பமான இலக்கியச் சந்திப்பு 18 ஆண்டு களை வெற்றிகரமாக கடந்து வந்திருக் கிறது.


இலக்கியச் சந்திப்பின் இந்த நீண்ட பயணத்தில் சபாலிங்கம், உமாகாந்தன், கலைச்செல்வன், சி.புஸ்பராஜா போன்ற இலக்கிய ஆளுமைகளின் கம்பீரமான பணி யினை இலக்கியச்சந்திப்பு நினைவு கூர்கி றது. கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் மனிதாபிமானிகளின் சங்கமமாக இலக் கியச் சந்திப்பு செயற்பட்டு வந்திருப்பதே அதன் மிகப்பெரிய பலமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஹென்ரிச் போல்



## (Heinrich Böll 1917-1985)

### திசையிழந்த மனிதன் ஏறிச் செல்லவென நேரத்திற்கு வந்த எழுத்து ரயில்

சந்துஷ்

போரின் வேதனைகளை எழுதிச் சென்றவர் அநேகர். போர் முடிந்த மண்ணில் கவியும் அதன் நிழலின் இருட்டில் சிக்கலான மனித இருப்பையும் மனிதனின் முகத்தின் சுயத்தையும் தேடியவை ஹென்ரிச் போலின் எழுத்துக்கள்.

இரண்டாம் உலகப் போரின் பின்னான ஜேர்மனியை ஆழமான தார்மீகப் பார்வையுடனும் போருக்குப் பின்னான சமூகத்தில் நிலவிய மனிதப் பெறுமானங்கள் மீதான விமர்சனத்துடனும் எழுதியவர் அவர். போலின் சனாதனம் சாராத கத்தோலிக்க இறைநம்பிக்கையை அவரது கதைகளில் இழையோடும் ஆன்மீகத்தினூடு புரிந்து கொள்ள முடியும்.

ஹென்ரிச் போல் ஜெர்மனியின் கோலோன் (Cologne)இல் பிறந்தார். தளபாடங்களையும் சிற்பங்களையும் தொழிலாகச் செய்து வந்த அவரது தந்தையின் மூதாதையர் இங்கிலாந்திலிருந்து றோமன் கத்தோலிக்கச் சட்டத்தால் வழங்கப்பட்ட குற்றத் தீர்ப்பிலிருந்து தப்ப ஜேர்மனிக்கு புலம் பெயர்ந்தவர்கள்.

இளவயதிலேயே கவிதைகளும் சிறுகதைகளும் எழுதிய போல், ஹிட்லரின் வாலிப அணியில் சேராத மிகச் சில இளைஞர்களில் ஒருவர். தகப்பனின் தொழிலை ஓட வைப்பதற்காய் போலின் தமையன் ஹிட்லரின் அணியில் சேர்கிறான். படிப்பைத் தொடர்ந்த அவர் 1937இல் மொழியியல் பட்டதாரியானபோது அவரது சான்றிதழ் இரு தவறுகளைக் கொண்டிருந்தது; அவர் பிறந்த திகதி தவறாகவும் எதிர்காலத்தில் செய்ய விரும்பும் தொழிலென அவர் எழுதியிருந்த 'புத்தக வியாபாரம்' அதிபரால் மாற்றியும் எழுதப்பட்டிருந்தது.

தான் எப்பொழுதும் புற நிர்ப்பந்தங்களினால் அழுத்தப்பட்டதாக ஹென்ரிச் போல் தன் எழுத்தின் பல இடங்களில் குறிப்பிடுவதுண்டு. "நாசிகளுக்கான என் எதிர்ப்புப்போரில் வெற்றியடைந்தது நாசிகள் தான். என் இருப்பின் ஒவ்வொரு கட்டத்தையும் அவர்கள் தாக்கினர். என் உள்ளுணர்வில், அரசியல் அபிலாசையில், அறப்பார்வையில் ஒரு பெரும் சவாலாய் என்னை அச்சுறுத்தினர்" என்று தனது ஒரு நாவலில் அவர் எழுதுகிறார்.

இரண்டாம் உலகப்போரின் இறுதிக் கட்டத்தில், நிர்ப்பந்தம் அவரை ஜெர்மன் படைகளில் சேர வைக்கிறது. சோவியத் படைகளுடனான போர்முனைகளிலும் மேற்கு அணிப்படைகளுடனான யுத்த முனைகளிலும் சிப்பாயாகவும் தனியாளாகவும் 6 வருடங்கள் அங்கம் வகித்து நான்கு முறை காயமுற்ற போல், போரின் இறுதி நாட்களில் அமெரிக்கப் படைகளினால் சிறைப்பிடிக்கப்பட்டு பிரான்சிலும் இங்கிலாந்துப் படைகளினால் பிடிக்கப்பட்டு பெல்ஜியத்திலும் போர்க்கைதிக்கான சிறைகளில் அவர் காலம் கழிந்தது.

போர் முடிந்து மீண்டும் கோலோனுக்குத் (Cologne) திரும்பியபோது நகர்ப்புறத்திலிருந்து இடம்பெயர்ந்து கிராமத்தில் வசித்து வந்த அவரது மனைவி குடும்பத்துடன் இடிந்து போயிருந்த ஒரு வீட்டைத் திருத்தி வசிக்கத் தொடங்கிய காலத்தில் எழுத்தையும் படிப்பையும் மீண்டும் தொடங்குகின்றார். சிரமம் நிறைந்த அந்த நாட்க



படிப்பகம்

www.padippakam.com


ளில் படிப்பு அல்லது தொழில், இதில் ஒன்றை மேற்கொள்வதாக உத்தியோக பூர்வமாக அறிவித்தால் உணவு அட்டை கள் கிடைக்கும்.

1946இலிருந்து 1949வரை இவரது பல சிறுகதைகள் வெளிவந்தன. இதில் Mad dog போன்றவை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன. இதில் நண்பர்களான ஒரு கொலையாளியும் ஒரு மதகுருவும் இரண்டாம் உலகப் போரின் பின் சந்தித்துக்கொள்ளும்போது தத்தமது பயங்கரமான அனுபவங்களின் நிமித்தம் தம்மை வெவ்வேறானவர்களாக உணர்கின்றனர். ஒருவித ஆன்ம வெறுமை இருவரையும் பிரித்து வைக்கிறது.

ஹென்ரிச் போலின் முதல் நாவலான The train was in time (ரயில் நேரத்திற்கு வந்தது) 1949இல் வெளியானது. 1951இலி ருந்து அவர் முழு நேரமாக எழுதத் தொடங்கினார். இந்தக் காலகட்டத்தில் Gruppe 47 (குழு 47) என்று தம்மை அழைத்துக்கொண்ட எழுத்தாளர் வட்டம் ஒன்றின் அறிமுகமும் நட்பும் அவருக்குக் கிடைக்கிறது. போருக்குப்பின் தீவிர எழுத் தில் ஈடுபட்ட இக்குழுவினரில் பலருடன் ஹென்ரிச் போலுக்கு நெருக்கமான நட்பு உண்டானது. அழிக்கப்பட்டு அலைக்கழிக் கப்பட்ட ஜெர்மனியில் அந்நியப்பட்டிருக்கும் பல எழுத்தாளிகளுக்கும் எழுத்தாளர்களு க்கும் "Gruppe 47" விடுதலையைத் தந்த தாக போல் சுயசரிதையில் சொல்கிறார்.

அவரது ஆரம்ப நாவல்கள் இராணு வத்தில் சேர்பவர்களின் வாழ்வின் விரக்தி யையும் வெறுமையையும் பேசுகின்றன. தன் இளவயதிலும் இராணுவத்திலும் சந்தித்த அடக்குமுறைகளையும் குரூரத் தையும் இவை பதிவு செய்திருக்கின்றன.

புழுவின் கண் (Worms-eye) என்ற கதையில் நவீன ஜெர்மன் சமூகத்தைப் பற்றிய அவரது விமர்சனப் பார்வை விரிவ டைந்து வேறொரு பரிமாணத்தை எட்டு கிறது. அவரது நாவல்களான Traveller, if you come to spa (பயணியே! நீ ஸ்பாவிற்கு வருவாயானால்....) Adam




where art thou (ஆடாம் நீ எங்கிருந்தாய்) போன்றவை நாஸி யுகத்தின் குரூரத் தையும் இராணுவ வாழ்க்கை முறை களையும் பேசுவன.

1952இல் போல் எழுதிய ஒரு கட்டு ரையில் போரைப்பற்றியும் வீடு திரும்பு தலையும் புனருத்தாரணம் அடைவதையும் தன் கதைகளின் பொருளாக்கியதை காலத்தின் தேவையெனக் குறிப்பிடுவதுடன் சிலர் அதற்கு 'கஞ்சல் இலக்கியம்' என அழைப்பதையும் ஏற்றுக்கொள்கிறார்.

அவரைப் பொறுத்தளவில் போர் முடிந்து வீடு திரும்பியிருந்த அதேவேளை தனக்கு ஒரு வீடு இந்த மண்ணில் இல்லை என உணர்ந்த தலைமுறைக்கு ஒரு யதார் த்தமான செய்தியாவது சொல்வதே தன் எழுத்தின் நோக்கம் என அவர் நினைத்தார். விமர்சன எழுத்து என்ற வகையிலும் அதிக பிரதிகள் விற்கப்பட்டதுமான Und sagta kein einziges wort (அத்துடன் ஒரு வார்த்தை தன்னும் பேசவில்லை) என்ற நாவல் தமது விவாக உறவை வறுமையின் நிமித்தமும் ஆணின் வாழ்வின் மீதான



படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கையீனத்தின் நிமித்தமும் முறிப்ப தென முடிவு செய்யும் இருவரைப் பற்றி யது.

“இல்லை நீ சொல்வதுதான் சரி, மீண் டும் ஒரு வாழ்வில் உன்னை மீண்டும் சந்தித்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக் கும். அப்பொழுதும் நான் உன்னை இப் போது போலவே காதலிப்பேன். பின் நாம் விவாகம் செய்துகொள்ளுவோம்.”

“நானும் அதையே தான் நினைத்தேன். அது தான் நல்லது” என்று சொன்னபோது என் கண்ணீரை என்னால் அடக்க முடிய வில்லை என்று பெண் கதையைச் சொல் கிறாள். வரிசையான தொலைபேசி அழைப் புக்களை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட The Clown (1963) (கோமாளி) சிறு கதையில் போருக்குப் பின்னான சமூகத் தின் நடைமுறைகளுடன் இணைந்து கொள்வதைவிட ‘ஏமாளியாகப்’ பார்க்கப் படுவதை மேலானதாக நினைக்கும் இளை ஞனைக் கதைசொல்லியாக பேசவிடுகிறார். ஹென்ரிச் போல் ‘சிரிப்பு’ என்னும் சிறு கதையில் மனவுணர்வுகளை வெவ்வேறு விதமான சிரிப்பு வகைகளின் குணாதி




சயங்களுடன் அணுகினார் அவர். நவீன உலகில் தன் தொழிலுக்காய் சிரிக்கும் மனிதன். இசைத்தட்டுக்களில், ஒலிநாடாக் களில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இன்னும் தேவைப்படும் இடங்களிலெல்லாம் சிரிக்கும் அவன், கதையின் இறுதியில் சொல்கிறான் “வெவ்வேறு விதங்களில் நான் சிரிக்கிறேன். ஆனால் என் சொந்தச் சிரிப்பை நான் கேட்டதே இல்லை”

நவீன வகை சார்ந்த எழுத்தாகக் கருதப்படும் Ulrike Meinhof என்ற நாவலில் Leni Pfeifer என்ற பெண்ணைப் பற்றிய பேட்டிகளையும் ஆவணங்களையும் தொகுப்பதன் மூலம் இன்னும் அறுபது கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை யும் விவரிக்கிறது. இது எழுதப்பட்ட காலத்தில் நவநாகரீகத் தன்மை கொண் டவை என மேட்டுக்குடிகளினால் இயம்பப் பட்ட நாவல்களின் பாணியை நையாண்டி யுடன் இதில் பிரதி செய்தார். அத்துடன் இறந்த மொழியாகிவிட்டிருந்த அதிகாரத் துலக்காலத்து உத்தியோகபூர்வ மொழியை நாசி அறிக்கைகளிலிருந்து எடுத்து நாவலில் பாவித்தார்.


“என் கதையின் முதற் பகுதியில் வரும் முக்கிய பெண் பாத்திரம் வயது : 48, ஜெர்மனிய இனம், உயரம்: 5அடி 6அங்குலம், நிறை: வீட்டு உடையில் 133 இறாத்தல்கள். அதாவது சராசரி நிறையை விட 14 அவுன்சுகளே குறைவு. அவள் கண்களின் நிறம் கருநீலமும் கருப்பும், தலையை ஒரு helmut போல மூடித் தோள் களைத் தொடும் அடர்த்தியான பொன் னிறத் தலைமுடி சாதுவாக நரைத்து வருகிறது” மனித உயிர் ஒரு உருப்படியா கவும், அதன் தகுதியையும் பெறுமானத் தையும் உடல்சால் தகுதிகளிலும் தோற் றத்திலும் நிர்ணயிக்கும் இயந்திரத்தனமான கண்ணோட்டம், பாசிச முறைமைகளிலும் வர்த்தகமய சமூக நடைமுறைகளிலும் ஒரு விதமாக ஊடாடுவதைக் குறிக்கும் துல் லியம் இது.

இந் நாவலில் லெனி என்ற பெண்ணின் வாழ்க்கையை மீளுருவாக்கம் செய்யும்



படிப்பகம்

www.padippakam.com




கதை சொல்லி அவளை ஒரே சமயத்தில் அறிவிற்கினியவளாகவும் புனிதமானவளாகவும் மறைமுகமாகச் சொல்கிறார்.

"ஒரு கருமை நிறைந்த குழந்தைப் பருவத்திலிருந்து, ஒரு மோசமான விவாக உறவிலிருந்து, சோவியத் யுத்தக் கைதி ஒருவனுடனான தடைசெய்யப்பட்டிருந்த காதலிலிருந்து, கோலோன் நகர் மீதான குண்டுவீச்சிலிருந்து, போருக்குப் பின்னான இழப்பிலிருந்து, லெனி தப்பியிருக்கிறாள்"

1968 – 70 காலப்பகுதியில் பல்கலைக் கழக ஆசிரியராக பிராங்போர்ட்டிலும், பிராக், இஸ்ரேல் ஆகிய இடங்களிலும் வேலை செய்த அவர் இக்காலங்களில் அரசியலிலும் ஆர்வங்காட்டினார். ஹென்ரிச் போலின் பிற்கால எழுத்துக்கள் 70இற்குப் பின்னான ஜெர்மனியைப் பிரதிபலித்தன. 1974இல் வெளியான The lost honour of Katharina Blum (கதரீனா புளுமின் இழந்த கௌரவம்) வலதுசாரி மஞ்சள் இதழியல் (Yellow journalism) மீதான ஒரு தாக்குதல்.

சமூகத்தின் பார்வையில் ஒழுக்கமான வீட்டு இளம்பெண்ணான கதரீனா புளும், பொலிசால் தேடப்படும் ஒரு இளைஞனை நேசிக்கிறாள். அவளைப் பொலிசிலிருந்து தப்புவதற்கு உதவிய காரணத்திற்காக அவளையும் பயங்கரவாத நடவடிக்கைகளில் பங்கெடுத்த ஒருத்தியென குற்றம் சாட்டுகிறது காவல்துறை. வியாபார நோக்கம் கொண்ட ஊடகத்துறை அவளைத் துரத்தித் துரத்தி வந்து ஒரு குற்றவாளியாக பிரபல்யப்படுத்துகிறது. குறிப்பாக Totges என்னும் நிருபர் அவளைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான சித்திரத்தை ஊடகங்களில் உருவாக்குவதில் குறியாக இருக்கிறான். பெண்ணின் அந்தரங்க வாழ்வை வியாபாரமாக்கும் நோக்கமும் அரசுக்கெதிரான நடவடிக்கைகளை துடைத்தெறிய வேண்டுமென்ற வலதுசாரி வெறியும் கொண்ட ஒரு பத்திரிகையின் பொறுப்பான அந்த நிருபர் தனது விளம்பரத்திற்காகவும் அவளை மனோரீதியாகச் சித்திரவதை செய்கிறான். இது அவளை அந்த நிருபரை கொலை செய்வதில் கொண்டுபோய் விடுகிறது. சூழ்நிலைக் கைதியான அவளை உடலுறவுக்கு அழைக்கும் நிருபரைச் சுட்டுக் கொன்றுவிடுகிறாள் அவள்.

வணிக ஊடகத்துறையானது ஒரு சாதாரண பிரஜையின் வாழ்க்கையை






படிப்பகம்

www.padippakam.com

மாற்றுவதிலும் தீர்மானிப்பதிலும் எத்தகைய பங்கை எடுக்கிறது. என்பதனை விபரிப்பதே இக்கதை. இந்தக்கதை எழுதப்பட்டிருந்த காலத்திலிருந்து இன்றுவரை வலதுசாரிக் கருத்தியலோடு சமூகத்தின் பல மட்டங்களிலும் இனவாத, ஆணாதிக்க, இடதுசாரி வெறுப்புப் பார்வையை பேணுவதில் முழுமூச்சுடன் இயங்கும் ஜெர்மனியின் அதிக வாசகர்களைக் கொண்ட நாளிதழ் ஒன்றையே ஹென்ரிச் போல் இக்கதையில் விபரிக்கிறார்.




அவரது சொந்த அனுபவமும் இது தான். 70களில் அரசிற்கும் அதன் காவற் படைகளிற்கும் எதிரான இராணுவ நடவடிக் கைகளில் ஈடுபட்டு வந்த அமைப்பான RAF (Red Army Faction) என்ற அமைப்பைச் சேர்ந்தவரெனக் கைது செய்யப்பட்ட Ulrike Meinhof என்ற பெண்ணை தனிச் சிறையில் அடைத்து சித்திரவதை செய்து வந்தது ஜெர்மனியக் காவல்துறை. இந்தப் பெண் நியாயமான முறையில் நடத்தப்பட்டு விசாரிக்கப்பட வேண்டுமென்று ஹென்ரிச் போல் பகிரங்கமாக அறிவித்தார். இதனால் காவல்துறை இவரது வீட்டைச் சோதித்தது. பொலிசினதும் ஊடகங்களினதும் ஆய்க்கினைகள் தொடர்ந்தன. வலதுசாரி விமர்சகர்களும் வியாபார ஊடகத்துறையும் அவரைத் தீவிரவாதிகளின் ஆதரவாளராகவும் பயங்கரவாத நோக்கம் கொண்டவரெனவும் சந்தேகித்தன.

தனது காலத்தின் சமூக உணர்வு நிலையை எதிரொலிப்பதே எழுத்தாளன் செய்ய வேண்டிய வேலை என்று ஹென்ரிச் போல் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். தன் காலத்தில் வழக்கிலிருந்த இலக்கிய மொழியை அவர் பகிடி செய்தபடி இருந்தார்.

தனிமனித உரிமைக்கும் சுயநிர்ணயத் திற்காகவும் வாதிட்டார். அணுகுண்டு யுகம்பற்றி எச்சரிக்கை செய்து கொண்டே இருந்தார். இது இறுதிக்காலங்களில் அவரை மீண்டும் தனது கத்தோலிக்க இறை நம்பிக்கை மீது நாட்டம் கொள்ள வைத்த காரணியாக இருக்கலாம். ஒருவித இறைத்தன்மைபற்றி ஆராய்ந்த வண்ணமிருந்த அவருடைய எழுத்து தன்காலத்து தேவாலயம் சார்ந்த மதக்கட்டுமானங்களை விமர்சித்துக் கொண்டுமிருந்தது. 1947இல் எழுதப்பட்ட A Soldier Legacy என்ற அவரது கதை 38 வருடம் கழித்து வெளியானது. 1985ம் ஆண்டு யூலை 16இல் Bonn நகரில் ஹென்ரிச் போல் மரணமானார்.

தனிமனித சுதந்திரத்தின் இறைமைக்காகவும் அறிவின் வெளிப்பாட்டு சுதந்திரத்திற்காகவும் பகிரங்கமாகக் குரல் கொடுத்த ஒருவர் இல்லாத இடைவெளியை அவரது மரணம் உருவாக்கியதாக இலக்கிய அரசியல் விமர்சன மட்டங்களில் ஆதங்கம் தெரிவிக்கப்பட்டது. நெருக்கடியான சூழ்நிலைகளில் மனித இருப்பை உறவுகளின் சிக்கலை, மனவிகாரங்களை நான்கைந்து தசாப்தங்களாக உரசிய அவரது எழுத்துக்கள், வேறு வேடமிட்டு படுவேகமாக நகரும் இன்றைய காலத்தின் பக்கங்களில் பட்டாற்கூட பொறிகளைப் பிரசவிக்கும் கூர்மை கொண்டவை.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை ஒரு கண்ணோட்டம்

ம

லை

யா

ன்

நன்றி: உயிர்மெய்

இலங்கைத்தீவில் தேசிய இனப்பிரச்சினையானது கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் கடுமையான ஆயுதப் போராட்டம், கொடுமையான யுத்தம் என்பனவற்றின் ஊடாகப் பயணித்து வந்துள்ளது. இதன் மூலம் இலங்கை இதுவரை கண்டிராத அளவுக்கு இரத்த ஆறு ஓடவேண்டியதாயிற்று. உயிர் இழப்புகளும், உடமை அழிவுகளும், இடப்பெயர்வுகளும், உச்சநிலையினை கொண்டுள்ளன. விபரிக்க முடியாத மனித அவலங்களையும், துயரங்களையும் மக்கள் நாளும் அனுபவிக்கின்றனர். வடக்கு, கிழக்கு மக்கள் மட்டுமன்றி, தென்னிலங்கை மக்களும் பல்வேறு நிலைகளில் பாதிப்புக்குள்ளாகி யுள்ளனர்.. முழு நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நிலையிலேயே இரண்டாயிரம் ஆண்டின் முற்கூறிலே அரசாங்கம், புலிகள் இயக்கத்திற்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் யுத்த நிறுத்தமும் ஏற்பட்டது. பேச்சு வார்த்தை தொடர்ந்து இடம்பெற்று வருவதாக இரு தரப்பினரும கடந்த நான்கு வருடங்களாக கூறிக் கொண்டே அவரவர்க்குரிய ஆயுத மற்றும் கருத்தியல் அரசியலை நடத்தி வருகின்றனர். இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்பு கடந்த நான்கு ஆண்டுகளாக குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுகளும் யுத்த விமான பேரிரைச்சல்களும் ஓரளவு ஓய்ந்து காணப்பட்டன. சமாதான சூழலின் பெறுமதியை ஒவ்வொருவரும் உணரக்கூடிய நிலை, தீவிலே வாழ்கின்ற மொத்த சனத்திடமும் தோன்றியுள்ளது. இருப்பினும் போரினால் இலாபம் பெற்றவர்களும் பேரினவாத யுத்த வெறியர்களும் அதிகாரப் பசி கொண்டவர்களும் மீண்டும் யுத்தம் வெடிப்பதையே வேண்டி நிற்கின்றனர்.தொடங்கியும் விட்டனர்.

இத்தகைய ஒரு சூழலில், இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை பற்றிய சாரம்சத்தைக் கண்டுகொள்வது அவசியமாகின்றது. இலங் கையின் சமூக அமைப்பிலே வர்க்க, இன, சாதிய, பால்ரீதியான முரண்பாடுகளும் அவை சார்ந்த ஒடுக்குமுறைகளும் இருந்து வருகின்றன. இவற்றில் வர்க்க முரண்பாடுகளும் ஒடுக்கு முறையுமே அடிப்படையானதாகும். அதேவேளை ஏனைய முரண்பாடுகள் அவற்றுக் குரிய தளங்களில் ஒடுக்குமுறை அம்சங்களைக் கொண்டே தொடர்ந்தன. இருப்பினும் அவற்றிற்கும் அடிப்படையான வர்க்க முரண்பாடு ஒடுக்குமுறைக்கும் இடையிலான உறவும் தொடர்பும் உள்ளார்ந்தரீதியில் உறுதிபெற்றதாகவே இருந்தும் வந்துள்ளது.

இவ்வாறு நோக்கும்போது இலங்கையின் நிலவுடமை முதலாளித் துவ மேட்டுக்குடி உயர் வர்க்கமானது எவ்வாறு தனது இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் ஆட்சிஅதிகார உறுதிப்படுத்தலுக்கும் இன முரண்



படிப்பகம்

www.padippakam.com

**சமாதான சூழலின் பெறுமதியை ஒவ்வொருவரும் உணரக்கூடிய நிலை, தீவிலே வாழ்கின்ற மொத்த சனத்திடமும் தோன்றியுள்ளது. இருப்பினும் போரினால் இலாபம் பெற்றவர்களும், பேரினவாத யுத்த வெறியர்களும், அதிகாரப் பசி கொண்டவர்களும் மீண்டும் யுத்தம் வெடிப்பதையே வேண்டி நிற்கின்றனர்.**

பாட்டை வளர்த்து பகைநிலையாக்கிக் கொண்டமையைக் கண்டுகொள்ள முடியும்.

தேசிய இனப்பிரச்சினையை இன்றைய நிலைக்கு வளர்த்துவிட்டமைக்கான ஆரம்ப விதைகள் கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதலே விதைக்கப்பட்டு வந்தன. பௌத்த சிங்கள மேலாண்மைக் கருத்தியல் அரசியல் சமூக மதத்தளங்களில் வலிமைபெற வைக்கப்பட்டன. கடந்த நூற்றாண்டு ஆரம்பமாவதற்கு முன்னே கத்தோலிக்க மக்களுக்கு எதிரான வன்மம் தூண்டப்பட்டது. அதன் பின்பு 1915ம் ஆண்டில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறை திட்டமிட்ட வகையில் நடத்தப்பட்டது. சிங்கள-முஸ்லீம் கலவரம் என்றழைக்கப்பட்டதனுள் அடங்கியிருந்த விஷவித்துக்கள் பௌத்த சிங்கள மேலாண்மையாகவே இருந்தன.

1920களின் ஆரம்பத்துடன் இலங்கைத் தமிழர்களைக் குறி வைத்து இன முரண்பாடு வளர்க்கப்பட்டது. மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கான அரசாங்கப் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக எழுந்த அரசியல் சர்ச்சையில் பௌத்த சிங்கள இனவாதம் தனது சுயரூபத்தை வெளிக்காட்டிக் கொண்டது. இவ்விதமான இன முரண்பாட்டு அம்சங்களை வளர்த்துக் கொள்வதில் இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ சிங்கள மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினர் முன்னின்றனர். அவர்களின் பக்கத்திலேயே காலனித்துவ ஆட்சியாளர்களும் இருந்து கொண்டனர். அதேவேளை தமிழ் அரசியல்வாதிகளால், தமிழர்களுக்கு எதிரான பௌத்த சிங்கள மேலாண்மைக் கூறுகள் அவ்வப்போது அடையாளம் காட்டப்பட்ட போதிலும் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் மட்டும் நின்றே சுட்டிக்காட்டினர். காரணம் அவர்களும் தமிழ் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினரை சேர்ந்தவர்களாகவே விளங்கினர். அத்துடன் அவர்களது வாழ்வும் சொத்துடமைகளும் கொழும்பை மையமாகக் கொண்டே இருந்து வந்தன.

கடந்த நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் அந்நிய காலனித்துவ ஆட்சிக்கு எதிரான ஒரு வலிமை பெற்ற தேசிய இயக்கம் இலங்கையில் தோன்றவோ வளரவோ இல்லை என்பது கவனத்திற்குரியதாகும். இலங்கையின் சுதந்திரத்திற்கான கோரிக்கையை முன்னிறுத்தி சகல இனங்களையும் ஒன்றுபடுத்தக் கூடிய ஒரு தேசிய இயக்கம் உருவாகி வளர்ச்சி பெற்றிருந்தால் இன முரண்பாடு வளர்க்கப்படுவது தடுக்கப்பட்டிருக்கும். இவ்விடயத்தில் அந்நிய காலனித்துவ சக்திகள் தூர நோக்குடன் செயல்பட்டுக் கொண்டன.

மேற்கூறிய பௌத்த சிங்கள மேலாண்மைக் கருத்தியல் இனவன்மத்துடன் ஒவ்வொரு காலகட்டத்திலும் முனைப்புப் பெற்று வந்ததுடன் அரசியல் அரங்கின் பிரதான ஓட்டமும் ஆக்கிக்கொண்டது. சுதந்திரம் என்பதை காலனித்துவவாதிகள் தமக்கு விசுவாசம் மிக்க நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடிகளின் பிரதிநிதிகளின் கைகளுக்கே கைமாற்றிக் கொடுத்துச் சென்றனர்.

அந்த உயர் ஆளும் வர்க்கத்தினர் முதன்முதலில் இலங்கையில் ஒன்றரை நூற்றாண்டாக வாழ்ந்து வந்த இந்திய வம்சாவழி மக்களின் பிரசாவுரிமை, வாக்குரிமையைப் பறித்து இன முரண்பாட்டைத் தீவிரப்படுத்தி தனது ஒடுக்குமுறைக்



படிப்பகம்

www.padippakam.com

கோலத்தை வெளிக் காட்டிக் கொண்டது. அடுத்து சிங்கள மொழியை தனித்து ஆட்சி மொழியாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்து இனமுரண்பாட்டை அடுத்த பகைநிலைக் கட்டத்திற்குள் கொண்டு சென்றனர். அதற்கு முன்பாகவே கிழக்கு மாகாணத்தின் தமிழர் நிலங்களையும் நீர்வளங்களையும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்கினர். இதில் 'தேசபிதா' என வருடத்தில் ஒருமுறை நினைவு கொள்ளப் படும் டி. எஸ். சேனநாயக்கா ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் நடைமுறையைக் கடைப்பிடித்தார். ஒன்று நில மற்ற சிங்கள மக்களுக்கு நிலம் வழங்கினார். இரண்டாவது அதே மக்களை இனவாத கருத்தியல் சிந்தனைக்குள் அமிழ்த்திக் கொண்டார். இதன்மூலம் தமது ஆளும் உயர் வர்க்க நிலையை சிங்கள மக்கள் மத்தியில் மறைத்து இன மேன்மையையும் மேலாண்மையையும் நிலைநாட்டிக் கொண்டார்.

இவ்வாறு இலங்கை அரசியலில் ஐம்பதுகளுக்குப் பின்பு இனமுரண்பாடும் இன ஒடுக்குமுறையும் U.N.P, S.L.F.P. இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளாலும் வளர்த்து முன்னெடுக்கப்பட்டன. இவை தமிழர்களுக்கு எதிரானதாக இறுக்கம் பெற்றன. தமிழ் மக்கள் மத்தியில் இவ்வின ஒடுக்குமுறைக்கு எதிரான தேசிய உணர்வுகள் வலுப்பெற்று பல்வேறு விதமான அகிம்சைப் போராட்டங்களாக வெளிக்கிளம்பின. அவற்றுக்குத் தலைமை தாங்கிய தமிழ்த் தலைமைகள் நிலவுடமை பழமைவாத சாதிய ஆதிக்க சக்திகளாகவே விளங்கின. அதனால் அவர்களது நிலைப்பாடுகள் தமது வர்க்க எல்லைக்கு உட்பட்டதாகவே இருந்தன. அதன் காரணமாக ஜே.ஆர். ஜயவர்த்தன இனமுரண்பாட்டை பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையாக்கி முன்னெடுத்த போது மேற்கூறிய தலைமைகளால் நின்று பிடிக்க முடியவில்லை. ஜே.ஆர்., யூ.என்.பி தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்முறையுடன் கூடிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு யுத்தத்திற்குள் புகுந்து கொண்டது. இருப்பினும் தமிழர் தலைமைகள் தமது வர்க்கநிலை காரணமாக யூ.என்.பி. ஆதரவு நிலைப்பாட்டையே தொடர்ந்தனர்.

இந்நிலையிலேயே 1983ம் ஆண்டிற்குப் பின் தமிழர்கள் மத்தியில் ஆயுதமேந்திய இளைஞர் போராட்டமானது இந்திய பிராந்திய வல்லரசின் கண்துடைப்பாலும் அளவிற்கதிகமான அகதிகளின் மேற்குலக புலப்பெயர்வில் கிடைத்த நிதி வசூலிப்பினாலும் பெரும் வீக்கத்தினைக் கண்டது.

பல்வேறு இயக்கங்கள் போராட்டக் களங்களில் நின்றபோதிலும் கொள்கை, தந்திரோபாயம், தூர நோக்கு என்பனவற்றில் தவறுகளையும் இயலாமைகளையும் வெளிப்படுத்திக்கொண்டன. அந்நிய அயல் சக்திகளின் கைக்கருவிகளாகி நின்றன. இவற்றால் சுயஅழிவுகளைத் தமிழ் மக்கள் தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. இருந்த போதும் தேசிய இனப்பிரச்சினையை உலகின்முன் கொண்டு வந்து நிறுத்தவும்

**கடந்த நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் அந்நிய காலனித்துவ ஆட்சிக்கு எதிரான ஒரு வலிமை பெற்ற தேசிய இயக்கம் இலங்கையில் தோன்றவோ வளரவோ இல்லை என்பது கவனத்திற்குரியதாகும். இலங்கையின் சுதந்திரத்திற்கான கோரிக் கையை முன்னிறுத்தி சகல இனங்களை யும் ஒன்றுபடுத்தக் கூடிய ஒரு தேசிய இயக்கம் உருவாகி வளர்ச்சி பெற்றிருந் தால் இன முரண்பாடு வளர்க்கப்படுவது தடுக்கப்பட்டிருக்கும்.**



படிப்பகம்

www.padippakam.com

**இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது தனியே தமிழ் மக்களை மட்டும் உள்ளடக்கிய ஒன்றல்ல என்ற யதார்த்தம் கண்டுகொள்ளப்பட வேண்டியதாகும்.**

அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கவும் ஆயுதப்போராட்டம் காரணமாகியது.

இன்று அரசாங்கம் - புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை ஆறாவது கட்டத்தையும் தாண்டிவிட்டது. ஆனால் அரசியல் தீர்வுக்கான எந்தவொரு முழுமையான ஆலோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. காரணம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத் தலைப்பில் பேரினவாதக் கருத்தியல் எவ்வகையிலும் குறைந்ததாக இல்லை என்பதாகும். மறுபுறத்தில் வெளியில் நிற்பவன் விட்டுட்டு ஓடியவன் என்ற முறைப்பாடுகள்தான் பேச்சுவார்த்தை மேசையில் முக்கிய கருப்பொருள்களாக்கப்பட்ட கையறுநிலை, அதேவேளை ஜேவிபி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன பேரினவாதக் கூக்குரலை முன்வைத்தே ஆட்சி அதிகாரத்திற்கு வந்துள்ளன. எனவே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது பல பத்துக் கேள்விகளுடனே இருந்து வருவது யதார்த்தமாகி நிற்கின்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது தனியே தமிழ் மக்களை மட்டும் உள்ளடக்கிய ஒன்றல்ல என்ற யதார்த்தம் கண்டுகொள்ளப்பட வேண்டியதாகும். இன்றைய இலங்கையின் சமூகச் சூழலை எடுத்து நோக்கும்போது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் என்னும் நான்கு தேசிய இனங்களும் பறங்கியர்கள், மலேயர்கள், வேடர்கள் என்னும் சமூகங்களும் இருந்து வருவதைக் காணலாம். இவர்களில் சிங்களவர்கள் இன, மத, மொழிரீதியில் பெரும்பான்மையினராக இருந்து வருகிறார்கள். ஆட்சி அதிகாரமும் அவர்கள் மத்தியில் உள்ள நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடியினரின் பிரதிநிதிகளிடமே வழி வழியாக இருந்து வருகின்றது. அந்த வர்க்கமே அரசு யந்திரத்தையும் அரச நிர்வாகத்தையும் அரசாங்கத்தின் ஊடாகப் பரிபாலனம் செய்து வருகின்றது. எனவே இனஒடுக்குமுறையைத் தமிழர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தியும் வருகின்றமையைக் காணலாம்.

அதேவேளை முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் என்போருக்கு எதிராக மட்டுமன்றி பறங்கியர்கள், மலேயர்கள், வேடர்களுக்கு எதிராகவும் வெவ்வேறு அளவுகளில் ஏவப்பட்டே வருகின்றன. முஸ்லீம், மலையகத் தமிழர்களின் தலைமைகள் எனப்படுபவை தமது வர்க்கநிலை காரணமாக ஆளும் பேரினவாத வர்க்க சக்திகளுடன் சமரசமாகி இருந்து வந்தபோதிலும் அம்மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறைகள் இருந்து வரவே செய்கின்றன.

எனவே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது சகல சிறுபான்மைத் தேசிய இனங்களையும் உள்ளடக்கிய ஒன்றேயாகும். தமிழ் மக்கள் மத்தியில் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் வலிமை பெற்றதன் மூலம் அதன் முக்கியத்துவம் முன்னிலைக்கு வந்துள்ளமை

**முஸ்லீம், மலையகத்தமிழர்களின் தலைமைகள் எனப்படுபவை தமது வர்க்க நிலை காரணமாக ஆளும் பேரினவாத வர்க்க சக்திகளுடன் சமரசமாகி இருந்து வந்த போதிலும் அம்மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறைகள் இருந்து வரவே செய்கின்றன.**



படிப்பகம்

www.padippakam.com

**இன்றும் சரி, எதிர்காலத்திலாயினும் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் சரியான திசையில் பயணிக்க வேண்டுமாயின் கடந்த கால அனுபவங்கள் பட்டழிவுகள் மூலம் பிழைகள், தவறுகள் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.**

இன்றைய யதார்த்தம். ஆனால் அதற்கான அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையில் முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் என் போரது பிரச்சினைகளும் இடம்பெறுவது அவசியமாகும். இதில் குறுகிய தமிழ்த் தேசிய நிலைப்பாடும் கண்ணோட்டமும் அர்த்தமற்றவை மட்டுமன்றி தூரநோக்கில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைப் பலவீனமாக்க வல்லனவாகும்.

இன்றும் சரி, எதிர்காலத்திலாயினும் சரி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கான விடுதலைப் போராட்டம் சரியான திசையில் பயணிக்க வேண்டுமாயின் கடந்த கால்நூற்றாண்டு காலத்தின் அனுபவங்கள் பட்டழிவுகள் மூலம் பிழைகள், தவறுகள் திருத்தியமைக்கப்படல் வேண்டும். தேசிய இனப்பிரச்சினையின் பரப்பும் எல்லையும் உரியவாறு கண்டுகொள்ளப்பட வேண்டும். நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பது தெளிவுடன் வரையறை செய்யப்படல் வேண்டும். இதில் குறுகிய தமிழ்த்தேசிய நிலைப்பாடு மட்டுமன்றி, வழிவழியாகப் படிந்து கையேற்கப்பட்டு வந்த தமிழர் பழமைவாத சாதிய ஆதிக்க கருத்தியல் சிந்தனை மரபு தூக்கி வீசப்படவேண்டும். அத்துடன் அந்நிய அயல் சக்திகளின் தலையீடும், குறுக்கீடும் உரியவாறு அடை யாளம் காணப்பட்டு நிராகரிக்கப்படவும் வேண்டும்.

அப்பொழுதுதான் தேசிய இனப்பிரச்சி னையால் பாதிக்கப்பட்டு நிற்கும் அனைத்து மக்களுக்கும் விடுதலையும் விமோசனமும் கிடைக்க முடியும். குறிப்பாகப் இனவாத ஒடுக்குமுறையால் தமது வாழ்வின் சகல கூறுகளையும் பறிகொடுத்துவிட்டு நிற்கும் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்கள் இன்றுவரையான அனுபவங்கள் பட்டழிவு கள் மூலம் ஒரு புதிய எதிர்காலத்திற்கான சூழலுக்குள் பிரவேசிக்க வேண்டும். யுத்தத் தின் வெடிகுண்டுக் கலாச்சாரத்தினாலும் வறுமையினாலும் சிக்கித்தவிக்கும் தென்னி லங்கை மக்களும் அதற்குரிய சரியான அரசியல் சிந்தனையையும் செயற்பாட்டை யும் நாடி நிற்க வேண்டும்.

தேசியவாதம் என்பது இன, மொழி, மத, பிரதேச அடிப்படையில் எல்லைக்குட் பட்டதாகும். தேசியவாதப் போராட்டம் ஒவ் வொன்றின் எல்லைக்குள்ளும் அதனை முன்னெடுக்கும் வர்க்க சக்திகளின் தலை மைத்துவங்களினாலேயே தீர்மானிக்கப்படு கின்றன. எனவே எந்த ஒரு தேசியப் போராட்டமும் வர்க்க அடிப்படையும் சாராம்சமும் இன்றி முன்னெடுக்கப்படுவ தில்லை. அவ்வாறே வர்க்க முரண்பாடும், வர்க்கப் போராட்டமும் சமூக இயங்கு விதியின் அடிப்படை என்பது புரிந்து கொள் ளப்பட வேண்டியதாகும். இவற்றின் வெளிச்சத்திலேயே தேசிய இனப்பிரச்சினை யின் அடிப்படைக் கூறுகள் அடையாளம் காணப்பட முடியும். அதன் மூலமே போராட் டத்தை தொடர்வதானாலும் பேச்சுவார்த் தையை முன்னெடுப்பதாயினும் சரியான உறுதியான தடத்தில் வழிநடக்க முடியும்.

**எந்த ஒரு தேசியப்போராட்டமும் வர்க்க அடிப்படையும் சாராம்சமும் இன்றி முன்னெடுக்கப்படுவதில்லை. அவ்வாறே வர்க்க முரண்பாடும், வர்க்கப் போராட்டமும் சமூக இயங்குவிதியின் அடிப்படை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.**



படிப்பகம்

www.padippakam.com

# நடிகவினோதன்
# ரி. யோகராஜாவுடன்
# ஓர் சந்திப்பு

'இனி'க்காக சந்தித்தவர்:
கந்தசாமி

ஈழத்தின் வடமராட்சிப் பகுதியில் வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் நடிக வினோதன் அவர்கள். இவர் ஈழத்தின் தகைமை பெற்ற நடிகர்களில் ஒருவர், அத்தோடு புலம்பெயர்ந்தபோதும் டென்மார்க்கில் Vestern Vinden எனும் டெனிஸ் நாடக மன்றில் ஊதியம் பெற்று நடிகராக வாழும் தகைமைக்குரியவராகவும் வாழ்ந்து வருகிறார்.

**வணக்கம்! நீங்கள் இந்த நாடகத்துறைக்கு எப்போது? எப்படி வந்தீர்கள்?**

**நடிகவினோதன் :** நான் எனது பள்ளிப் பருவத்திலேயே இத்துறைக்கு வந்துவிட்டேன். எனது எட்டாவது வயதில் எனது பாடும் திறனைக் கண்ட எனது தமிழ் ஆசிரியர்களான அல்வாயூரைச் சேர்ந்த ஜீ. ஜீ. மகாலிங்கம் ஆசிரியரும், ஆ. கதிரவேல் ஆசிரியரும், கோவலன் -கண்ணகி, அரிச்சந்திர மயானகாண்டம், சத்தியவான் - சாவித்திரி போன்ற ஸ்பெஷல் நாடகங்களிலும் காத்தவராயன் நாடகத்திலும் முக்கிய பாத்திரங்களில் நடிக்க வைத்தார்கள்.

**நீங்கள் ஓர் கலைஞன் என்பதும் உங்களுக்குள் அதன் ஆளுமை உள்ளதாகவும் எப்போது உணர்ந்தீர்கள்?**

**நடிகவினோதன் :** எனது இருபதாவது வயதில் 'தூய உள்ளம்' என்னும் சமூக நாடகத்தை நானே எழுதி நெறியாள்கை செய்து தேவரயாளி இளைஞர் நாடக மன்றத்தினர் மூலம் மேடையேற்றியதினைக் குறிப்பிடலாம். ஏனெனில் பல போட்டி நாடகங்களில் அந்நாடகம் தங்கப் பதக்கங்களை வென்று குவித்தது. அது தவிர சிறந்த நடிகருக்குரிய பரிசினையும் எனக்குப் பெற்றுத் தந்தது. அதுவுமன்றி 1982இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்னை வானொலிக் கலைஞனாகத் தேர்ந்தெடுத்தது. அவ்வப்போது நான் எழுதிய சில நாடகங்களையும் ஒலிபரப்புச் செய்தது. 1985இல் நடிகமணி வைரமுத்து அவர்கள் நடிக வினோதன் என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தார். பின் புலம்பெயர்ந்து வந்தபோது மேல் காற்று (Vestern Vinden) என்னும் டெனிஸ் நிறுவனம் என்னை நடிகனாக அங்கீகரித்து வேலைக்கமர்த்தியபோதும் எனக்குள் இருக்கும் ஆளுமையை நான் புரிந்து கொண்டேன்.

**மேலைத்தேசத்தில் இப்சன், செகாவ், பிராண்டோ போன்றவர்கள் யதார்த்த நாடகங்கள் நிறையவே செய்திருக்கிறார்கள். இவை பற்றி...**

**நடிகவினோதன் :** இது பற்றிக் கூறுவதாயின் தமிழில் பெரிதான வளர்ச்சி இல்லை என்பதே என் அபிப்பிராயம், ஆனால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கே. எம். வாசகர் இருந்த காலத்தில் நாடகத் தமிழை விடுத்து பேச்சு வழக்கிலுள்ள



படிப்பகம்

www.padippakam.com

தமிழை நாடக உரைநடைகளில் சேர்த்துக் கொண்டார். மற்றையது தமிழின் வாழ்க்கைத் தரம் தாழ்ந்திருக்கும்போது மேலான ஓர் வளர்ச்சி உடனே ஏற்பட்டுவிடாது.

**டெனிஸ் நாடகக் குழுவில் வாழும் கலைஞராக இருக்கிறீர்கள் இதனிடையே ஏதாவது வேறுபாட்டினைக் கண்டுள்ளீர்களா?**

**நடிகவினோதன் :** ஸ்கிறிப்ட் இல்லாமல் நடிப்பதை முதலில் இங்குதான் கற்றுக் கொண்டேன். பார்வையாளர்கள் எங்களில் ஒருவராக இருப்பதையும் இங்கேதான் கற்றுக் கொண்டேன். கதை சொல்லல், கதை கேட்டல் என்பதை விடுத்து கதையை நகர்த்தல் என்பது இங்கு கூட்டாக நடைபெறுகிறது. கலைஞரும் சுவைஞரும் பங்காளராக இருக்கிறார்கள். மீடியா வளர்ந்தும் பொதுமைப்பட்டிருப்பதையும் புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

**நீங்கள் வடமராட்சியினைச் சேர்ந்தவர். அந்த வகையில் நெல்லியடி அம்பலத்தாடிகளுக்கும் உங்களுக்குமான உறவு எப்படி இருந்தது?**

**நடிகவினோதன் :** எனது துரதிர்ஸ்டம் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. மற்றையது அது ஒரு இடதுசாரிகளின் கலைமன்றாகவே இருந்தது. ஈழத்து நாடக வரலாற்றில் அவர்களை விடுத்து கலை இலக்கியம் சார்ந்து பேசமுடியாது.

**இறுதியாக ஓர் கேள்வி தற்போது எவ்வகையான நாடகங்களை எவ்வகையான உத்திகளை உங்கள் நாடகங்களில் கையாளுகிறீர்கள்?**

**நடிகவினோதன் :** தமிழ் நாடக அரங்குகளில் ஓரங்க நாடகங்களைத்தான் தற்போது இயக்கியும் நடித்தும் வருகிறேன்.





படிப்பகம்

www.padippakam.com

# At udfylde tomheden



**Gowsi Sivarajah**

**D**er er sikkert nogen af jer der kender til følelsen, den følelse af tomhed der er efter man er færdig med gymnasiet. Et mål man har set frem til i tre er endelig opnået, og folk man har gået op og ned af i tre år, skal man pludselig ikke til at se regelmæssigt. Folk udfylder den tomhed på forskellige måder, nogen starter på nyt studie, andre tager i militæret, og nogle helt andre tager ud og rejser, og det var præcis sådan jeg og to venner valgte at fylde tomheden efter gymnasiet.

Når man ankommer til Bangkok efter to dårlige måltider, to ligegyldige film og 10 timer i en umenneskelig siddestilling, så kan Bangkok godt virke meget forvirrende, men det er enlig let nok, der er to slags mennesker i Bangkok, dem der prøver at tage røven på dig, og dem der ikke gør, dermed ikke sagt at thaier er dårlige mennesker, men man skal forstå hvor todelt samfundet er i Thailand. Uden på er Bangkok utrolig udviklet, men går helt ned og ser hvordan den gennemsnitlige thai har det, så ligner alle de luksuriøse hoteller og indkøbscentre en kunstig skal som udelukkende er lagt der for at tilfredsstille de hungrende turister med tykke tegnebøger. Et eksempel på det oplevede jeg, da vi var på vej op af en sidegade til et stort nybygget indkøbscenter, hvor vi så en mand som gik og tiggede, manden havde mistet en arm, og om hans hals havde han hængt en kop som man kunne putte penge i, jeg kunne ikke lade være med at tænke at han sikkert havde mistet armen på at bygge det indkøbscenter han nu gik og tiggede ved.

Som de backpackere vi var valgte vi ikke at blive i Bangkok ret længe, da vi inden tog af sted havde en forventning om at opleve det virkelige Thailand, hvilket vi ikke følte vi kunne gøre i Bangkok. Så vi tog stille og roligt længere og længere væk fra civilisationen, hvilket man tydeligst kunne se på toiletforholdene. Men vi fik opfyldt vores forhåbninger om at opleve det virkelige Thailand, og et af de tydeligste minder jeg har om det, var



படிப்பகம்

www.padippakam.com

da vi var på en guidet trekking tur, hvor vi lige har fået indkvarteret os i en lille landsby, hvorefter guiden med sit gebrokne engelsk får fortalt os at vi skal følge med. Og efter en mere eller mindre halsbrækkende tur over en bambusbro, kommer vi til en lille sø, som han føre os videre over, hvorefter vi klatre op på nogle klipper, og pludselig træder vi ind i et lille hul i klippen, og pludselig opdager at vi står i en drypstenshule. Stedet var så urørt og perfekt på samme tid at det var helt uvirkeligt.

Leonardo DiCaprio sagde i filmen "The Beach" at Bangkok var porten til Sydøstasien, og det er det ganske rigtigt også. Herfra er der fly, tog og busser til omtrent alle omkringliggende lande, ture til enhver pengepung. Vi skulle gennem Cambodja til Vietnam, og det skulle gøres billigt, så vi valgte at tage med bus.

Det er svært at sige så meget om Cambodja, da vi kun var på gennemrejse, men en ting der var radikalt anderledes end Thailand var at, hvor vi gik fra at hovedparten af folk man mødte, var villige til at hjælpe, til at stort set alle prøvede at tage røven på dig, hvilket kun opildnede vores følelse af at vi bare skulle så hurtigt igennem som overhovedet muligt. Det vil med tiden blive et problem, at befolkningen spiser af den hånd der fodre dem, da turister der kommer til Cambodja og bliver snydt, selvfølgelig ikke kommer tilbage, og advare venner og familie om at tage til Cambodja, men det er svært at bebrejde befolkningen i Cambodja som endnu ikke oplevet at leve under en regeringen som har hjulpet befolkningen.

Lige fra man er trådt over grænsen til Vietnam, er man ikke i tvivl om at det er et socialistisk (eller kommunistisk om man vil) land man er trådt ind i, det røde flad med en gul stjerne i midten, ser man vitterligt overalt.

Selvom det er relativt lang tid siden, så er vietnamkrigen stadig et emne som de beskæftiger sig meget med, og man kan i næsten enhver en by, på ethvert hotel, booke ture som på den ene eller den anden måde har noget med krigen at gøre.



I Ho Chi Minh City (tidligere Saigon, nu opkaldt efter stifteren af det vietnamesiske kommunistparti) besøgte vi "Museum of American war crimes". I Hue besøgte vi den såkaldte DMZ, som splittede Vietnam i nord og syd. Og en ting der var glædende for begge udflugter var at de er meget ensrettede i deres fremstilling af hvad der skete under krigen. Selv på udflugter som et



படிப்பகம்

www.padippakam.com

besøg til tempelruiner, bliver der fortalt om hvordan amerikanerne havde ødelagt templerne med deres bomber. Og spurgte vi ind til hvad guiderne lavede under krigen, havde de for det meste haft en mellem høj rang inde for militæret. Hvilket man så kan bruge til at konkludere at, regeringen nok føre en form for kontrol med hvad der bliver sagt til turisterne.

Efter 2 måneder på fremmed grund, var vi alle glade for at komme hjem. Hjem til relativt gode toiletforhold, selv på offentlige steder. Hjem til restauranter, hvor man ikke nødvendigvis behøver sætte spørgsmålstegn ved hygiejnen. Men vi skulle også hjem til en regering, som ikke synes at det vi har gjort er en god ide, men som tværtimod bare vil have os igennem studierne så hurtigt som overhovedet muligt, hvorefter vi skal ud på arbejds-markedet for at tjene til staten. Jeg kan godt se at det i rene tal, er fornuftigt at få folk igennem, så de kan støtte den voksende ældrebyrde, men vi skal også spørge os selv om det er virkelig er små robotter vi vil avle til en stadig mere globaliseret verden.

At udfylde tomheden.

# Will Peace Elude Us Once More?



**A. J.**

This is the question on everybody's lips, especially after the negotiations between the Ranil Wickremasinghe Government and the Liberation Tigers of Thamil Eelam, which began in February 2002 stalled after six rounds of talks.

While one cannot give a categorical 'yes' or 'no' answer to this question, it might be helpful to recall the history of past peace negotiations.

The first such negotiation was between President Premadasa and the Tigers. The only common ground between both parties was that both wanted the IPKF out of Sri Lanka. After the withdrawal of the Indian troops, both sides held parleys. The negotiations were carried out in a clandestine manner and up to date no one knows what was discussed or what decisions were arrived at. The upshot was the resumption of war and, ultimately, the assassination of President Premadasa by a suicide bomber.

When the People's Alliance of Chandrika Bandaranaike Kumaratunge edged out the UNP which had been continuously in office since 1977, and came to power in 1994, Chandrika who had campaigned on a peace platform, took the initiative to negotiate with the Tigers who responded favourably. There was a wave of euphorbia, which quickly subsided once the negotiations were broken off by the Tigers. Instead of the 72 hours' notice



படிப்பகம்

www.padippakam.com

before the resumption of hostilities, the Tigers destroyed two naval vessels anchored in the Tricomalee harbour within a few hours of the announcement of the breaking of the negotiations.

Then the Chandrika Government unleashed a 'war for peace' (which is an oxymoron). This war led to both sides being battered badly: the Tamil civilians suffered most and the Sinhala government too did not get off lightly.

It was in this situation of a stalemate in the war and a run-down war-devastated economy that the UNF, led by Ranil Wickremasinghe, managed to edge out the P.A. led by Chandrika and capture power in Parliament.

JR 'de Gaullist constitution of 1978 continues to haunt Sri Lanka even after his death: while Ranil's coalition party is in power in Parliament, Chandrika continues to be President until the next Presidential elections. The uneasy co-habitation between the President and the Premier has already led to squabbles. The peace negotiations too have become a contentious issue, as a result. Both a trading accusations: the President accuses Ranil of dividing the country and conceding the North-East to the Tigers, while Ranil accuses Chandrika of trying to secretly sabotage the peace process while openly declaring her support for the peace progress.

The initial euphorbia of February 2002 (when the negotiations began) has evaporated; opinion polls show a drop in people's expectations of an immediate peace. Most people have got the impression that while there is a lot of sunshine talk by Government spokesmen; little has changed on the ground. The felling is that both sides might try to prolong the negotiations for different reasons. Ranil would like the present cessation of hostilities to continue till the next Presidential elections, which he is virtually sure of winning. (Not even the JVP can turn a born loser like Anura into a winner). The Tigers might want a prolongation of the talks as it suits their agenda.

So where does this leave the non-combatant civilians on both sides? As usual, they'll be losers whether it's war or peace.

Whether one cannot categorically state whether peace will elude us once more or not, for the simple reason that categorical answers are likely to be overtaken by events, one thing seems fairly certain: the present no war, no peace scenario might continue for quite some time. And the non-combatant civilians on both sides will be thankful for such mercies.

2004ம் ஆண்டு "காலவெளி" என்னும் தொகுப்பினை கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருந்த வேளை 'விம்பம்' சாந்தகுணத்துக்கு ஊடாக ஏ.ஜே. அவர்களுடன் நான்கைந்து நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடும் வாய்ப்பினைப் பெற்றேன். சிறிது நேரம் பேசினாலும் நிறைவாகப் பேசினார். இறுதியில் இச்சிறு செய்தியை பிரசுரத்தில் சேர்க்க அனுப்பிவைத்தார். நினைவாக இங்கு பிரசுரிக்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

# மதம்

**ஜேர்மன் மூலம்:**
Isabelle My Hanh Derungs
**தமிழில்:**
*பிரணவி குணசீலன்*

நான் எந்த மதத்தைச் சேர்ந்தவள் என என்மீது எப்போதும் கேள்விகள் தொடுக்கப்பட்டன. இதற்குப் பதிலளிக்க நான் அதிக நேரம் எடுத்தபோது, கேள்வி கேட்டவர்கள் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர். இந்தக் கேள்விக்கு எப்படி, என்ன பதிலை அளிப்பது என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. எனது கடவுள் எந்தத் தேசியத்தையும் சேர்ந்தவர் அல்ல. அவருக்குத் தோல் நிறங்கள் பற்றித் தெரியாது. எந்தக் கட்சியையும் பிரதிநிதித் துவம் செய்யாததுடன், எந்த மதத்தையும் சாராதவர் அவர். அவர் கிறிஸ்தவராகவும், பௌத்தராகவும், இந்துவாகவும் இன்னும் இஸ்லாமியராகவும் இருக்கலாம். அவர் கடவுள். சரியாகச் சொல்வதானால் அவர் எனது கடவுள். ஆனால் அவர் எனக்கு மட்டும் உரியவர் அல்ல. நான் எந்த மதத்தைச் சேர்ந்தவள் என என்னிடம் கேள்வி கேட்டவர்களும், இந்தக் கடவுளைத்தான் கடவுள் எனக் கருதுகின்றார்களா என்பது எனக்குத் தெரியாது. எனது கடவுளுக்கு எந்த விளக்கமும் தேவையில்லை. அவர்பற்றி எந்தப் பிரகடனமும் நான் செய்யவேண்டியதில்லை. எனது தாயார் புரட்டஸ்தாந்து மதத்தவள். எனது மாமாக்கள் பௌத்தர்கள். என்னிடம் கேள்வி கேட்டவர்களுக்கு அவர்களின் பாஷையில் நான் பதில் அளித்தேன். ஆனால் அவர்கள் எனது பதிலில் திருப்தி அடையாதவர்களாக என்னிடமிருந்து மேலும் பதிலை எதிர்பார்த்தார்கள். இன்னும் ஒரு தடவை விளக்கமளித்தேன்.

எனது பாட்டனாருக்குப் பத்துப் பிள்ளைகள். அவர் ஒரு மத போதகர். தனது நாளாந்த வாழ்வில் சீனாவின் புராதன மத சிந்தனைகளையும், பௌத்த சிந்தனைகளையும் பின்பற்றினார். எனது பாட்டி தனது இருபத்தைந்தாவது வயதில் இந்தோனேஷியாவின் முதல் யுத்தத்தில் தனது கணவனை இழந்திருந்தார். அதன் பின்னர் அவர் தன்னை கிறிஸ்தவ மதத்தைத் தழுவ அனுமதிக்குமாறு அவரது தந்தையைக் கேட்டதற்கு அவர், அனுமதி அளித்ததுடன் பாட்டியின் அந்த முடிவையும் ஆதரித்தார். இதற்குக் காரணம் கிறிஸ்தவ மதம், மற்றைய மதங்களை விடவும் சிறந்தது என அவர் கருதியது அல்ல. மாறாக அவர் தனது பத்துப் பிள்ளைகளும் சுதந்திரமாகவும், சுயமாகவும் தமக்கு விரும்பிய மதங்களைத் தெரிவுசெய்து அன்புடனும், ஐக்கியத்துடனும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனாலாகும். எனது பூட்டனார் அவரது நாட்டையும், அவர் பிறந்த மண்ணையும் ஒருபோதும் விட்டு அகன்றதில்லை. எந்த யுத்தமும் அவரை அந்த மண்ணில் இருந்து வெளியேற்ற முடியவில்லை. அவரது வீட்டிலேயே அவர் இறந்ததுடன் குடும்ப உறவினர்கள் புதைக்கப்பட்ட மயானத்திலேயே அவரும் புதைக்கப்பட்டார். அவர் எப்படி பயிர்ச் செய்கையை நேசித்தாரோ அப்படித்தான் இன்று அவர் புதைக்கப்பட்ட அந்த மயானப் பகுதி சோளம், நெல், வாழை மற்றும் பழமரங்கள், மரக்கறித் தோட்டங்கள் நிறைந்ததாக உள்ளது. கணிசமான அளவு



படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகள் அவர் புதைக்கப்பட்ட இடத்தில் தீபங்களை ஏற்றி இன்னும் அஞ்சலி செலுத்துகின்றனர். எனது பூட்டனாரை அவர்களது பூட்டனார் போன்று தான் அந்த விவசாயிகள் கருதுகின்றனர். இன்னும் எவ்வளவு காலத்திற்கு அவரது சமாதி அங்கிருக்கும் என்று எவருக்கும் தெரியாது. சிலவேளைகளில் அபிவிருத்தி என்ற பெயரில் ஒரு இராட்சத இயந்திரம் வெகு விரைவில் அங்கு வந்து அந்த நினைவுச் சின்னத்தையும் மரங்களையும் அங்கிருந்து அகற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனது அம்மா, அம்மம்மாவின் மதத்தைத் தான் தனதாக்கிக் கொண்டவள். அம்மாவும், அம்மம்மாவும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சைகோனில் உள்ள மெதடிஸ்ட் தேவாலயத்திற்குச் செல்வார்கள். நானும் அவர்களைப் பின்பற்றினேன். நத்தார் தினத்தன்று தேவாலயத்திற்குச் செல்வது எனக்கு மிகவும் பிடித்தமானது. எல்லாப் பிள்ளைகளுக்கும் நிறைய இனிப்புக்கள் கிடைக்கும். அது மட்டுமல்ல ஒரு போதுமே அன்பாய் எம்மோடு பழகாத கோபம் நிறைந்த வளர்ந்தவர்கள்கூட அன்றைய தினம் அன்பாய் இருப்பார்கள். எனது மாமிமாரையும், மச்சான், மச்சாள் மாரையும் பௌத்த விகாரைகளுக்கும், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் அழைத்துச் செல்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. பௌத்த விகாரைகளில் வீசும் சந்தனக்குச்சியின் வாசம் என்னைத் தாலாட்டும். அவை மெல்ல மெல்ல எரிந்து புகைவிட்டு இல்லாமல் போகும். ஆனாலும் அந்த வாசம் என் உடலோடு ஒட்டி நான் வீடு சென்ற பின்னரும் இன்னும் மணம் வீசும். வியட்நாமில் கடவுள் பற்றியும், உலகைப் பற்றியும் நான் சிந்திப்பது மிகவும் குறைவு. ஏனெனில் அங்கு வீசப்பட்ட குண்டுகளும், அதனால் எனது அன்புக்கு உரியவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களும்தான் என் கண்முன்னே தோன்றுவதுடன், எனது மனதிலும் நீங்காத இடத்தினைப் பிடித்துள்ளன. எனக்கு மிகவும் பிடித்தமான சூப்பைத் தினமும் காலையில்

**Isabelle My Hanh Derungs**



**இவர் வியட்நாமில் பிறந்தவர். 1995ம் ஆண்டில் இருந்து சுவிட்சர்லாந்தில் அமாலியா என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றை இயக்கி வரும் இவர் முக்கியமாக மனிதனும் இயற்கையும் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டும், எழுதியும் வருகின்றார்.**



படிப்பகம்

www.padippakam.com

குடிப்பேன். மாலையில் உறவினர்களுடன் வாவிக்கரைக்குச் சென்று மட்டி எடுப்பதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. மழைக்காலம் என்றால் கொண்டாட்டம்தான். வானம் பெய்த மழை என் உடலையும் மனதையும் ஈரமாக்கும். சுவிற்சர்லாந்தில் எனது தாய் மெதடிஸ்ட் தேவாலயத்திற்குச் செல்கிறாள் நானும் அவளுடன் செல்கிறேன். கடவுள் யாரைக் காப்பாற்றுவார்? யாருக்குத் தண்டனை வழங்குவார்? எதனை விரும்புகிறார்? எதனை வெறுக்கிறார்? என்பதை எனது செவிகள் முதல் தடவையாகக் கேட்டன. மற்றும் யேசு கிறிஸ்து எனக்காகச் சிலுவையில் அறையப்பட்டு மரணமானார் என்றும் அறிந்தேன். எனக்கு என்றுமே விருப்பமில்லாத, அப்பிள் சாப்பிட்ட ஆதாமும், ஏவாளும் எனது முன்னோடிகளானார்கள். நான் எங்கே கடவுளை நெருங்குகிறேன் என்பது எனக்குத் தெரியாமல் இருந்தது. தேவாலயத்தில் பிரார்த்தனை செய்யும் பொழுதா? அல்லது புதன்கிழமைகளில் பைபிள் பாடத்திற்குப் போகும்பொழுதா? அல்லது கிறிஸ்தவர்கள் மட்டும்தான் கடவுளால் காப்பாற்றப்படுவார்கள் என்று கூறக் கேட்கும்பொழுதா? அல்லது எனது நண்பர்களுடன் இருக்கும்பொழுதா? என்பது எனக்குத் தெரியாது. இதற்குப் பதிலளிக்க எந்தப் புத்தகத்தினைப் படிப்பது நல்லது? எதனைப் படிப்பது நல்லதல்ல? என்பதும் எனக்குத் தெரியாது. நான் எனது கடவுளை மிக நெருக்கமாக உணர்கிறேன். காட்டில் தனிமையாக இருக்கையில் இலைகளின் சரசரத்த காற்றோசையில், பறவைகளின் இனிய குரலோசையில், எனது பூட்டனின் தோட்டத்துச் சிந்தனைகளில் எனது கடவுளை மிக நெருக்கமாக உணர்கிறேன். சந்திரனைப் பார்க்கும்போது அது வடக்காய் இருந்தாலும், தெற்காய் இருந்தாலும், கிராமமானாலும், நகரமானாலும் எனது கடவுளை நெருக்கமாய் உணர்கிறேன். மழைத்துளிகள் என்னைத் தொடும்போது, கட்டெறும்புகள் சுறுசுறுப்பாய் இயங்கும் போது - அவை தமக்கான உணவைச் சேகரிக்கும்போது - அவை எங்கள் கடவுள் சிவப்பு எறும்பா? கறுப்பு எறும்பா? எனக் கேள்விகள் கேட்காதபோது எனது கடவுளை நான் நெருக்கமாக உணர்கிறேன். என்றுமே என்னை அறியாத குழந்தைகள் என்னைப் பார்த்துச் சிரிக்கும்போது அவர்களின் சிரிப்பில் கடவுளைக் காண்கிறேன். நேற்று இராணுவ அதிகாரிகளாக இருந்து அதிகாரம் செய்தவர்கள் இன்று யுத்தத்தின் பின் ரிக்ஷா ஓட்டுபவர்களாக உழைக்கும்போது பெண்களும், ஆண்களும் அவர்களின் பார்வையில் என்னை ஆரத் தழுவி அவர்களில் ஒருத்தியாய் - ஒரு சகோதரியாய் - ஒரு மகளாய் - ஒரு மாமியாய்... என்னை நினைக்கும்போது கடவுளை நெருக்கமாக உணர்கிறேன். பைபிள் பாடத்தின்போது மத நம்பிக்கையுடைய முஸ்லிம் ஒருவருக்கு என்ன நடக்கும் என்று நான் கேட்டேன். பத்தொன்பது வயதாக இருக்கும்போது ஒரு முஸ்லிம் இளைஞனைக் காதலித்தேன். அவர் மத நம்பிக்கை கொண்ட ஒருவராக இருந்தார். எனது நண்பிகள் நான் ஒரு கிறிஸ்தவள் என்றும், ஒரு கிறிஸ்தவனைத் தெரிவு செய்யவேண்டும் என்றும் சொன்னார்கள். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. தேவாலயத்தில் நாங்கள் அமர்ந்திருந்து அல்லேலூயா பாடினோம். எனக்கு முன்வரிசை ஒன்றில் அந்த முஸ்லிம் இளைஞனை நான் பார்த்தேன். என்னை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக அவர் தேவாலயத்திற்கு வந்திருந்தார். கடவுள் எல்லையற்றவர் என்பதை நான் விளங்கிக் கொண்டேன். இந்த நொடிப் பொழுதில் எனது கடவுள் அவரின் கடவுள். அவரின் கடவுள் எனது கடவுளாய் இருப்பதைப் போன்று. பல ஆண்டுகளுக்குப் பின்னர் எனது இன்றைய கணவனைச் சந்தித்தேன். பிரார்த்தனை முடிந்த பின்னர் அல்லது தொடங்குவதற்கு முன்னர் தேவாலயத்திற்குச் செல்வது அவரது வழக்கம். ஒவ்வோரு சிலையையும், மற்றும் ஓவியங்களையும் கூர்ந்து கவனிப்பார். அதிகமான தேவாலயங்கள் மிக இறுக்கமான கொள்கைகளைக் கொண்டவை என்பது அவரது நிலைப்பாடு.



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பத்தில் அவரது இந்த நிலைப் பாட்டை என்னால் விளங்கிக்கொள்ள முடிய வில்லை. அவரது விளக்கங்களை மற்றை யவர் மீதான குற்றச்சாட்டாகவே நான் கருதினேன். ஆனால் பின்னர் அவரிடமி ருந்து பல விடயங்களை நான் கற்றுக் கொண்டேன். நாங்கள் பல தேவாலயங் களுக்குச் சென்றோம். கிராமியச் சூழலில் அமைந்துள்ள தேவாலயங்களை அவதா னித்தோம். கிராமியப் பாஷைகளை, விவ சாய மொழியை, பண்டைய பாரம்பரியங் களைக் கற்றுக்கொண்டோம். எனது தாய கத்திற்கு எடுத்துச் செல்லக்கூடியவற்றைக் கண்டறிந்தேன். பல தேவாலயங்களில் மெழுகுவர்த்திகளை எரிக்கும்போது எனது மண்ணில், கோயில்களில் சந்தனக் குச்சி களை எரிக்கும் நீங்காத நினைவு என்னை வந்து தட்டும். கற்களும், மரங்களும், நீர் நிலைகளும் எனது தேசத்தில் என் இள மைக் காலத்தை இரை மீட்டன. எவ்வளவு நேரம் காடுகளுக்குள் இருந்து மரங்களோடு கதை பேசியிருப்பேன். மணித்தியாலக் கணக்காக கடற்கரையில் இருந்து மேலெ ழும் கடலலையைச் சலிக்காது பார்த்துக் கொண்டிருப்பேன். எப்படி அலைகள் வரு கின்றன? போகின்றன...? வருகின்றன? போகின்றன?.. கடல்கள் நதிகளைப் பிரச விக்கின்றன. நிலம் பழமாக அதாவது தாயாகக் குஞ்சுகளைக் - குட்டிகளை - குழந்தைகளைப் பிரசவிக்கின்றது. வியட் நாமிய மொழியில் எல்லாப் பிறப்புக்களும் குஞ்சு,குட்டி, குழந்தை என்ற அடைமொழி கொண்டே எழுதப்படுகின்றன. பாம்புக் குஞ்சு (Con Rang), நாய்க் குட்டி (Con Cho), மனிதக் குழந்தை (Con Nguoi)... இங்கு Con என்பது குட்டி, குஞ்சு, குழந் தைகளைக் குறிக்கின்றது. நான் எப்போதும் கடவுளைப் பற்றிப் பேசுவது எனது பழக்க தோஷம். அப்படித்தான் நான் வளர்க்கப் பட்டேன். மரியாளைக் கும்பிடும்போதும், ஒரு பழத்தை உண்ணும்போதும் கடவு ளையே நினைப்பேன். Cai என்பது எனது மொழியில் பெண். பழம் என்பது எனது மொழியில் Trai. அதன் இலக்கண வடிவம் பெண்பால். பழம் என்பது பெண்பால் வடிவமாகவே எனது மொழியில் பயன்படுத்தப்படுகிறது.

(பழம் = Trai);

(பெண் = Cai).

அப்பிள்பழம் (Cai Trai Tao)

வாழைப்பழம் (Cai Trai Chuoi)

தக்காளிப்பழம் (Cai Trai Ca)

இவை அனைத்தும் ஒரு பழத்தில் இருந்துதான் கிடைக்கின்றன. பழங்கள் பெண்ணாகத் - தாயாக வியட்நாம் மொழி யில் கொள்ளப்படுகின்றன. நாங்கள் மனிதர் கள். கடவுளுக்கு பல்வேறு பெயர்களைச் சூட்டுகிறோம். என்ன பெயரைக் கொண்டு நாம் கடவுளை அழைத்தாலும் கடவுள் எப்போதும் கடவுள்தான்.

**ஐக்கிய அமெரிக்காவில் இந்தியர்கள்**

38% வைத்தியர்கள்
12% விஞ்ஞானிகள்
36% நாசாவில் அலுவலர்கள்
34% மைக்ரோசொ∴ப்ட் நிலையத்தில் பணி புரிவோர்
28% ஐ. பி. எம். இல் பணி புரிவோர்
13% தொலைத்தொடர்புகளில் வேலை செய்வோர்
17% ஏனைய சகல துறைகளிலும் வேலை செய்வோர்



படிப்பகம்

www.padippakam.com

# அஞ்சல்கள் அஞ்சல்கள் அஞ்சல்கள்

நண்பர் ஒருவரிடமிருந்து 'இனி' இதழ் படிக்கக் கிடைத்தது. புகலிட இலக்கியங் களைத் தேடிப் படிக்கும் எனக்கு 'இனி' தாங்கிவந்த விடயங்கள் மகிழ்ச்சியைத் தந்தது. நான் பிறந்தது, வளர்ந்தது யாழ்ப்பாணத்தில். படித்தது நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில். எனது வாப்பாவுக்கு அங்கு வியாபாரம் இருந்தது. அதனால் அது சாத்தியமாயிருந்தது. 'இனி'யை கொண்டு வரும் ஆசிரியரையும் நண்பர்களையும் எனக்குத் தெரியுமென நம்புகிறேன். பள்ளிக்கூடக்கால நண்பரின் பள்ளிக்கூடக்காலப் போக்கை அப்படியே பொத்தகத்தில் பார்த்தேன். 'எங்களுக்காக சிலுவை சுமக்கின்ற வரிகள்' எனக்குக் கண்ணீரை வரவழைத்தது. வேற்றுமொழி ஆக்கங்களை அதே பக்கத்தில் மொழி பெயர்த்துப் போட்டால் பொத்தகத்துக்கு சிறப்பாக அமையும், நாமும் விளங்கிக் கொள்ளலாம் அல்லவா? தொடர்ந்து வெளிவர வேண்டும். எங்களுக்கும் தொடர்ந்து கிடைக்கச் செய்யவும்.

ஹமால் காதர்
காத்தான்குடி
2006

நீண்ட இடைவேளைக்குப் பின்பு 'இனி' என்று பெயர் சூடிய ஓர் இலக்கியக் காலாண்டிதழ் டென்மார்க்- வையன் நகரி லிருந்து வெளிவரத் தொடங்கியுள்ளது. அதன் உள்ளடக்கம் பன்முகம் சார்ந்த படைப்புக்களைக் கொண்டதாயினும், அவற்றில் இடதுசாரித்தனமும் ஒடுக்கு முறைக்கெதிரான கருத்தியலும் முன்னிலை வகிப்பதை மறுப்பதற்கில்லை.

குறிப்பாக எம்.ஏ.ஜே, ஜென்னி, சரவணன் போன்றோரின் வரைவுகளில் இவை தாக்கமாக வெளிப்படுத்தப்பட் டுள்ளன. சரவணன் அளித்துள்ள பல வாறான விடைகளில் சில கூறுகளை ஆராய்ந்து பார்க்கும்போது அவை வேறான பார்வைகளுக்கும் தேடுதல்களுக்கும் உட்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பது போலத் தோன்றுகிறது.

ஒப்புரவர்
கோர்னிங்

**இனி ஒருவிதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்....**

நீண்ட இடைவெளிக்குப் பின் டென் மார்க் நாட்டில் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றினை பார்க்கையில் மனதிற்கு சந்தோசமாக வுள்ளது. அதுவும் முற்போக்கு பார்வை யுடன் வெளிவருவது ஆரோக்கியமான



படிப்பகம்

www.padippakam.com

விடயம். இன்றைய சூழலுக்கு 'இனி' என்ற பெயர் மிகவும் பொருத்தமாகும்.

'இனி' முதலாவது இதழின் அமைப்பு நன்றாகவுள்ளது. ஆக்கங்கள் எல்லாமே தரமாகவுள்ளன. டானியலைப் பற்றிய பகுதியில் சௌந்தரின் ஓவியம் டானியலை நேரிலேயே நிறுத்தியுள்ளது. அடுத்து, மனிதத்தினை மறந்து போன ஹிட்லரை நியாயப்படுத்த ஒரு சுப்பிரமணியமல்ல, பல சுப்பிரமணியங்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இதைப்பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. காலப்போக்கில் அவர்களே அடங்கி விடுவார்கள். இந்த இனியின் உயிர் அந்த எட்டுப் பக்கங்கள். அதுதான் சரவணனுடனான நேர்காணல் பக்கங்கள். இந்த இடத்தில் எதைப் பேச வேண்டுமோ அது இங்கே பேசப்பட்டுள்ளது. படித்துவிட்டு நல்ல பேட்டி என்று சொல்வதை விட்டு எங்களுக்குள் சென்று எங்களை நாங்களே தேடிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பேச்சிலே மட்டும் முற்போக்கை வெளிப்படுத்தாமல், பச்சோந்தித்தனத்தையும், சுயநலத்தையும் கைவிட்டுவிட்டு, செயற்பாட்டையும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

சரவணனின் எழுத்துக்கள் இனியில் தொடர வேண்டும்.

இன்றைய இந்தச் சூழலில் புலி ஆதரவு அல்லது புலி எதிர்ப்பு என்ற பேச்சுக்களும் விவாதங்களும் நிறைந்திருக்கும் நிலைமையினை பரவலாக காணக் கூடியதாக வுள்ளது. சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம் மேலோங்கியுள்ளது. பலருடைய சாயங்களும் வெளுக்கத் தொடங்கியுள்ளது. நாங்கள் புலி ஆதரவாளர்கள் என்ற போர்வைக்குள் தங்களைத் தக்க வைத்துக் கொள்ள முயல்பவர்களும், வெறும் புலி எதிர்ப்புப் பேசி தங்களைப் புத்திஜீவிகளாக காட்டுவதோடு, இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களை மேலோங்கச் செய்ய முயற்சிக்கும் புலி எதிர்ப்பாளர்களும் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் முற்போக்கு எழுத்தாளர்கள், சமூக அக்கறையாளர்கள் மௌனமாக்கப்பட்டிருப்பதும், ஒரு சிலர் வெளிப்படையாக மக்கள் மத்தியில் இயங்க முடியாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக அரைகுறையாக தங்களை வெளிக்காட்டிக் கொண்டிருப்பதும் தமிழ் மக்களின் துரதிர்ஸ்டம். மக்கள் நிறைய கேள்விகளோடு இருக்கின்றார்கள்.

இந்நிலையில் எம்மால் மக்களுக்கு என்ன செய்ய முடியும்? இங்கு எழுத்தாளர்களின் பொறுப்பு என்ன? இனி எங்கள் கடமை என்ன....? தவிர, தொடர்ந்து இனி வரும் ஒவ்வொரு 'இனி'யும் சிறப்பாக அமைய வேண்டும் என்பதே என் விருப்பம். எதிர்பார்ப்புகளுடன்...

பாக்கியன்.
கொல்ஸ்ரபோ

# அஞ்சல்கள்
# அஞ்சல்கள்
# அஞ்சல்கள்



படிப்பகம்

www.padippakam.com

# சற்று முன்னர் வரை

தாத்தா வீட்டு அங்கணத்தில்
குளித்துக் கொண்டிருந்தது

அகால நேரத்தில் அகராதி பிடித்து
அகலக்கால்வைத்து
முகப்பைத் தாண்ட

நெடுஞ்சாலையின் நடுவில்
நெரிசலில் மாட்டிக்கொண்டது

வர வழிதெரியாமல்
சரிவில் உருண்டு விழுந்து
வெய்யிலில் நனைந்து
இறக்கைகளை இழப்பதற்கு
சற்று முன்னர் வரை
வண்ணத்துப் பூச்சியாய்
அழகாகத்தான் இருந்தது.


செழியன்



படிப்பகம்

www.padippakam.com

## குற்றமற்றவர்கள் மட்டுமே கல்லெறியலாம்



அன்பும் தோழமையும் கொண்ட நண்பர்களே!

சிறு சஞ்சிகைகளுக்குரிய சூழலுக்குள் தான் நாமும் தாமதித்தே! இனியும் பிறக்கிறது, இனி வரும் காலங்களில் காலக்கிரமத்தில் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை சொல்லி வைக்க விருப்பங்கொண்டவராய் நாம். 'இனி' வெறும் ஆர்வக்கோளாறின் வெளிப் பாடன்று, கொண்டவர்க்கு நன்றி! எனின், முரண்பாடு பற்றிய ஆய்வு மக்கள் மத்தி யிலான முரண்பாடு என்ற கருத்தாக்கத்தை முன் வைத்து விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் என்றும் போல் ஆர்வமுள்ள வராய்.

எமது கண்ணீர்த் துளிகள் அநீதிகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் போதுமானதன்று. கூடவே விளைவு களுக்காக மட்டுமன்றி காரணங்களுக்காகவும் எமது கலை இலக்கியங்களுக்கூடாக நாம் போராட வேண்டும் அப்போதான் உண்மையான விமோசனத்தினை நாம் எல்லோரும் அடைய முடியும். வாழ்க்கையின் சிறிய விவகாரங்களிலிருந்து மிகப் பரந்த பொதுமைகளுக்கு அனைத்தையும் கடத்துகின்ற கட்டுடைப்புச் செய்கின்ற நோக்கு எங்களதாக இருக்க வேண்டும். மற்றையது 'இனி'யில் தொடர்ந்து வருகின்ற இரண்டாம் தலை முறையினரின் டெனிஸ் பக்கங்கள் தவிர்க்க முடியா தவை. இதை எப்படிப் பார்க்க வேண்டுமெனில் இங்கி லாந்திலும் அமெரிக்காவிலும் ஆங்கிலத்தில் இலக்கி யங்கள் படைக்கப்படுகின்றன. அவை ஆங்கில இலக்கி யங்கள் என அழைக்கவும் படுகின்றன. அதேவேளை ஆபிரிக்காவில் ஆங்கிலத்தில் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் ஆங்கில இலக்கியங்கள் என அழைக் கப்படுவதில்லை அவை ஆபிரிக்க இலக்கியங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. தற்போதைக்கு இப்படி இதனை முடித்துக்கொள்வோம் இனி தொடரும்!.

—ஆர்—



படிப்பகம்

www.padippakam.com

Youth, oh it can burn hills!

In my dark world - only thin light rays of sadness
made (their way) to my feet

In my desert filled with hills and waterfalls
Hunger fed me
and poverty brought me up with love/care
Are they deserts?
No, not at all
Worse than that

The deep foot prints of sadness in the wet earth
print my history again and again
Why?

time repeats itself in striped circles

joy, smiling from afar
on nearing
is burnt to ashes by the fire of sorrow

To my heart that loses its beats/rhythm so very often
Only these joys bring life closer and give hope of life itself

is it really there?
or is just the longing of life`s existence
life itself?

kindness, love, differences, relationships
i do have,
inspite of it all - insurmountable hurdles?
to offer them

how often have i
stretched out my hands in longing to receive
the children running towards me
to kiss them on their foreheads and bless them
and broken my arms in stretching them in vain

who brings forth these walls
who are those who cleanse their dust and upkeep them

தமிழ் மூலம் : கலைச்செல்வன்

ஆங்கிலத்தில் : மணி சுப்ராயன்

படிப்பகம்